வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 03 | 15.09.2022 வியாழக்கிழமை | இதழ் : 280 | பக்கங்கள் : 16

## பூச்சிய வரைவு தீர்மானம் வெளியானது

# உள்நாட்டு பொறிமுறையை வலுவூட்டுவதற்கு அழைப்பு!

- தமிழரின் கோரிக்கை புறக்கணிப்பு
- மாகாண தேர்தலை நடத்த அழைப்பு
- பயங்கரவாத சட்டத்தை இரத்தாக்க அழைப்பு

ஜெனிவா, செப்ரெம்பர் 15

போர் குற்றங்கள், மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பான விசாரணைகளுக்கு உள்நாட்டு பொறிமுறைகளை வலுப்படுத்த அழைப்பு விடுத்துள்ளது இலங்கை தொடர்பான ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் பூச்சிய வரைவு தீர்மானம். அத்துடன், காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகம், இழப்பீடுகளுக்கான அலுவலகம் ஆகியவற்றை மீண்டும் வலுப்படுத்துவதன் முக்கியத்துவத்தை தீர்மானம் வலியுறுத்தியுள்ளது. 15

## முதல் நபராக ராணி உடலுக்கு அஞ்சலி செலுத்திய ஈழப் பெண்!



லண்டன், செப். 15

அண்மையில் காலமான பிரிட்டனின் இரண்டாம் எலிசபெத் மகாராணியின் உடலுக்கு வெஸ்ட்மின்ஸ்டர் மண்டபத்தில் இறுதி அஞ்சலி செலுத்துவதற்காக கூடிய மக்களில் ஈழத்து தமிழ் பெண் முதல் நபராக அஞ்சலி செலுத்தியுள்ளார்.

கடந்த திங்கட்கிழமையில் இருந்து இந்த 15

## நீதி வழங்கப்படும் என்று எதிர்பார்க்கவே முடியாது!

### ஜெனிவாவில் சந்தியா எக்னெலிகொட

ஜெனிவா, செப். 15

காணாமல் ஆக்கப்பட்ட அனைவரும் உயிரிழந்து விட்டனர் அல்லது வெளிநாடு சென்று விட்டனர் என்று 2017இல் பிரதமராகப் பதவி வகித்த வேளை ஜனாதிபதி தெரிவித்தார். அவர் நீதியை வழங்குவார் என்று எதிர்பார்க்க முடியாது என்று காணாமல் ஆக்கப்பட்ட பத்திரிகையாளர் பிரகீத் எக்னெலிகொடவின் மனைவி சந்தியா எக்னெலிகொட தெரிவித்துள்ளார்.

பலவந்தமாக காணாமல்போகச் செய்யப்பட்டவர்களின் குழுவின் 23ஆவது அமர்வு ஜெனிவாவில் நேற்று நடந்தது. இதில் உரையாற்றிய 15

## ‘தேசிய பேரவை’ பிரேரணை விரைவில் ஒழுங்கு புத்தகத்தில்!

கொழும்பு, செப். 15

பாராளுமன்றில் புதிதாக நிறுவப்படவுள்ள “தேசிய பேரவை“ தொடர்பான பிரேரணை எதிர்வரும் 20ஆம் திகதி ஒழுங்கு புத்தகம் மற்றும் ஒழுங்கு புத்தகத்துக்கான அனுபந்தத்தில் உள்ளடக்கப்படவுள்ளது.

இதற்கமைய இந்தக் குழுவின் தலைவர் பதவி சபாநாயகருக்கு வழங்கப்படவுள்ளதுடன், பிரதமர், பாராளுமன்ற சபை முதல்வர், எதிர்க்கட்சி தலைவர், ஆளும் கட்சியின் பிரதம கொறடா மற்றும் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் தேசிய பேரவையின் ஏனைய உறுப்பினர்களாவர். 15

## அதிகாரப் பகிர்வு இல்லையேல் இலங்கையில் முதலீடும் இல்லை!

### உலக தமிழர் பேரவை

யாழ்ப்பாணம், செப். 15

அதிகாரப் பகிர்வு வழங்கப்படாமல் இலங்கையில் எந்தவிதமான முதலீடுகளையும் மேற்கொள்ளப் போவதில்லை என்று உலகத் தமிழர் பேரவை தெரிவித்துள்ளது.

அந்த அமைப்பின் பேச்சாளர் சுரேன் சுரேந்திரன் இது குறித்து தெரிவிக்கையில்,

இலங்கை தற்போது நெருக்கடியான நிலை 15

## ஜெனிவாவில் 28இல் இலங்கை விவகாரம்

ஜெனிவா, செப். 15

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பான புதிய பிரேரணை எதிர்வரும் 28ஆம் திகதி விவாதத்துக்கும் வாக்கெடுப்புக்கும் முன்வைக்கப்படும் என்று ஜெனிவா வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கை தொடர்பாகத் தயாரிக்கப்படக் கூடிய புதிய பிரேரணை, 28ஆம் திகதி இறுதி சமர்ப்பணத்துக்கு வரும் வரை அங்கத்துவ நாடுகளின் விருப்பு வெறுப்புகள், எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப, மாறி மாறி திருத்தங்களுக்கு உள்ளாகும் எனவும் கூறப்பட்டது. (அ)

## இந்தியா எங்களுக்காக குரல் கொடுக்கவேண்டும்!

### சிவாஜிலிங்கம் கோரிக்கை

வடமராட்சி, செப். 15

பொறுப்பு கூறல் விடயத்தில் இந்தியா எங்களுக்காக குரல் கொடுக்க வேண்டும் என்பதே எங்களுடைய எதிர்பார்ப்பாகும் என்று தெரிவித்துள்ள முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம். கே. சிவாஜிலிங்கம், அரசியல் தீர்வு விடயத்தில் 13ஆவது திருத்தச் சட்டமே இறுதித் தீர்வு என இந்தியா அரசாங்கம் தனது நிலைப்பாட்டை எடுக்கக்கூடாது என்றும் கூறியுள்ளார்.

வல்வெட்டித்துறையில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித் 15

### இலங்கை விடயம் தொடர்பில்

## இந்தியா, ஆஸி, அமெரிக்கா ஜப்பான் நாடுகளின் தூதுவர்கள் கூடிப்பேசினர்!

கொழும்பு, செப். 15

அமெரிக்கா, அவுஸ்திரேலியா, இந்தியா, ஜப்பான் நாடுகளின் இலங்கைக்கான உயர்ஸ்தானிகர்கள் நேற்று புதன்கிழமை சந்தித்து இலங்கை விவகாரம் குறித்துப் பேசினர்.

கொழும்பில் உள்ள அமெரிக்காவின் புதிய தூதரகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இலங்கை மற்றும் பிராந்தியத்தில் கவனத்துக்குரிய விடயங்கள் குறித்து இந்தச் சந்திப்பின் 15

## இப்படியும் நடக்கிறது...!

ஐ. நா. மனித உரிமைப் பேரவையின் ஐம்பத்தியொராவது கூட்டத் தொடர் இப்போது ஜெனிவாவில் நடந்து வருகின்றது.

இலங்கைக்கு எதிரான புதிய தீர்மானம் எதிர்வரும் இருபத்தியெட்டாம் திகதி சமர்ப்பிக்கப்பட்டு வாக்கெடுப்பு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

பிரிட்டன் தலைமையில் ஆறு நாடுகள் கூட்டாக சமர்ப்பிக்கவிருக்கும் இந்தப் பிரேரணையின் முதலாவது நகல் வடிவம் கடந்த பன்னிரண்டாம் திகதியே உறுப்பு நாடுகளிடம் கையளிக்கப்பட்டிருக்கின்றது.

ஏற்கனவே இந்த முறை கூட்டமைப்பிலிருந்து யாரும் ஜெனிவா செல்லவில்லை என்று தெரிவித்திருந்த கூட்டமைப்பின் பேச்சாளர் என்று அறியப்பட்ட சுமந்திரன், திடீரென்று ஜெனிவா சென்றிருக்கிறார்.

ஜெனிவாவிலுள்ள அமெரிக்க தூதரகம் இன்று பகல் மதியபோசன நிகழ்வு ஒன்றை நடத்தவிருக்கின்றது. அதாவது இந்த மனித உரிமைகள் பேரவை மாநாட்டுக்கு வந்திருக்கும் நாடுகளின் பிரதிநிதிகளுக்கான இந்த விருந்தில் கலந்துகொள்ளுமாறும் இலங்கை நிலைமை குறித்து அங்கு பேசுமாறும் அவருக்கு கிடைத்த அழைப்பை ஏற்று அவர் சென்றிருக்கின்றார் என்றும் அறியமுடிந்தது.

இதேவேளை, இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை பேரவையில் சமர்ப்பிக்கும் ஆறு நாடுகளுக்கும் தலைமை தாங்கும் பிரிட்டன், தமது தீர்மான நகல் குறித்து விவாதிப்பதற்காக எதிர்வரும் பதினாறாம் திகதி ஒரு கூட்டத்துக்கு ஏற்பாடு செய்திருக்கின்றது. இந்தக் கூட்டத்திலும் அவர் கலந்துகொள்ள சென்றிருக்கிறார் என்று அவரே தெரிவித்திருக்கிறார்.

இந்தக் கூட்டம் முதலில் பத்தொன்பதாம் திகதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாகவும் ஆனால், தான் அந்த நாளில் கலந்துகொள்ள முடியாது என்றும், தமது கட்சியின் மத்திய குழுக்கூட்டம் இருப்பதால் தாயகத்தில் நிற்கவேண்டும் எனவும் சுமந்திரன் பிரிட்டனுக்கு அறிவித்திருந்தார் எனவும் ஆனால், பின்னர் அந்தக் கூட்டம் பதினாறாம் திகதிக்கு மாற்றப்பட்டதாகவும் அதனால் அதிலும் அவர் கலந்து கொள்வார் என்றும் ஒரு செய்தி தெரிவித்தது.

அவருக்காகவே அந்தத் திகதி மாற்றப்பட்டதாக தமிழ் மக்களை நம்ப வைக்க எடுக்கப்பட்ட முயற்சி அது. ஆனால், பத்தொன்பதாம் திகதி பிரிட்டன் மகாராணியின் இறுதிச் சடங்குகள் நடக்கவிருக்கின்றன. அன்று பிரிட்டனைப் பொறுத்தவரை தேசிய துக்கதினம். அதனாலேயே அந்தக் கூட்டம் முன்னதாக மாற்றப்பட்டது என்பது தெரிந்ததுதான்.

ஆனால், அந்தக் கூட்டமே தீர்மான நகலைத் தயாரிப்பதற்கான உத்தியோகபூர்வ கூட்டம் என்றும் சில செய்திகள் கசியவிடப்பட்டுள்ளன. முதலாவது நகல் ஏற்கனவே தயாரிக்கப்பட்டு அது பன்னனிரண்டாம் திகதியே வெளியிடப்பட்டும் விட்டது. அது ஒரு நல்லதொரு முதல் வரைவு என்று சுமந்திரனே தெரிவித்தும் இருக்கின்றார். இந் நிலையில் அந்த நகலை தயாரிப்பதற்காகவே  அவர் அஙகு செல்கிறார் என்று தமிழ் மக்களை நம்பவைக்க முயற்சி செய்வது இது ஒன்றும் முதல் முறை அல்லவே.

ஜெனிவாவில் ஒரு தீர்மானம் வருவதென்றால், அதனைத் தயாரிக்கும் நாடுகள் முதல் நகலை தயாரித்து உறுப்பு நாடுகளுக்கு வழங்கும். பின்னர் அந்த நாடுகள் தத்தமக்குள் அதனை ஆராய்ந்து அதில் தங்களால் ஏற்றுக் கொள்ளக்கூடியவற்றை அல்லது ஏற்கமுடியாதவை பற்றிய தத்தமது கருத்துக்களை சொல்வார்கள். அதற்காக பல்வேறு சிறிய சிறிய கூட்டங்களை உறுப்பு நாடுகளும் தீர்மானத்துக்கு ஆதரவு வழங்கும் நாடுகளும் ஏற்பாடு செய்யும். இவ்வாறான கூட்டங்களில் ஏற்கனவே அங்கு சென்றிருக்கின்ற  ரெலோவின் குருசுவாமி சுரேந்திரன், அனந்தி சசிதரன் போன்றவர்கள் கலந்துகொண்டு நமது நிலையை எடுத்துச் சொல்லி வருகின்றனர். பல ஆண்டுகளாக அங்கு சென்று வந்த சிவஞானம் சிறீதரன் எம். பி. போன்றவர்கள் இதுபோன்ற கூட்டங்களில் சூம் தொழில்நுட்பம் வழியாகவும் கலந்துகொண்டு வருகின்றனர்.

இனி அந்தத் தீர்மானம் இவ்வாறு உறுப்பு நாடுகளின் யோசனைகள், திருத்தங்களை உள்வாங்கி கடைசி நகலாக வரும்போது எப்படி இருக்கும் என்பதை இப்போது சொல்லமுடியது என்றாலும், அந்த இறுதி வரைவில் அந்தந்த நாடுகளின் தலைவர்களே- அவர்களின் விருப்பங்களே இடம்பெறும் என்பதும் எதிர்பார்க்கக்கூடியதே.

முதல் வரைவு சிறப்பானதாக இருப்பது நம்பிக்கையளித்தாலும், நம்மவர்களே அதில் புகுந்து குழப்பாமல் இருந்தால் சரிதான்.!

- ஊர்க்குருவி

# தேசிய பாதுகாப்புச் சட்டம் என்பது பயங்கரவாத சட்டத்தின் மறுபெயர்!

## ஜனாதிபதி சட்டத்தரணி தவராசா சுட்டிக்காட்டு

கொழும்பு, செப். 15

போராட்டங்களை, ஊர்வலங்களை நடத்தினாலும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் பெயர் மாற்றமடையுமே தவிர பயங்கரவாதத் தடைச் சட்டமோ அதன் கொடூரமான உள்ளடக்கங்களோ மாறப் போவதில்லை என ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்-

இலங்கையில் பயங்கரவாதத் தடைச்சட்டம் தொடர்ந்து நடைமுறையில் இருப்பது குறித்து பல்வேறு தரப்புக்களும் கண்டனம் தெரிவிப்பதையடுத்து ஜெனிவாவில் இடம்பெற்று வரும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது கூட்டத் தொடரில் பயங்கரவாதத் தடைச்சட்டத்திற்கு பதிலாக விரிவான தேசிய பாதுகாப்புச் சட்டத்தை இலங்கை கொண்டு வருமென வெளிவிவகார அமைச்சர் உறுதியளித்துள்ளார்.

இலங்கை அரசாங்கத்தினால் 1947ஆம் ஆண்டு 25ஆம் இலக்க சட்டமாக கொண்டு வரப்பட்ட பொது மக்கள் பாதுகாப்பு கட்ட ளைச் சட்டம் நடைமுறையில் இருக்கும் பொழுது பயங்கரவாதத் தடைச்சட்டத்தினை முற்றாக நீக்காமல் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் பெயரை மாற்றி  தேசிய பாதுகாப்புச் சட்டம் என்ற பெயரில் புதிய சட்டம் ஒன்று கொண்டுவர உத்தேசித்துள்ளமை பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் மறுபெயராகுமே தவிர வேறு எந்த மாற்றமும் இருக்கப் போவதில்லை.

பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டுமென கடந்த நல்லாட்சிக் காலத்தில் ஜெனீவா வரைக்கும் கொண்டு  செல்லப்பட்ட அழுத்தம் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கும் நிலைப்பாட்டுக்கு 2015ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த நல்லாட்சியென அழைக்கப்பட்ட அரசாங்கத்திற்கு  ஏற்பட்டதையடுத்து, நல்லாட்சிக் காலத்தில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவதாக் வாக்குறுதியளித்த அரசாங்கம் பயங்கரவாத தடைச் சட்டத்தின் பெயரை பயங்கரவாத  எதிர்ப்புச்சட்டம் என பெயர் மாற்றப்பட்டு சட்ட வரைவுகள் நிறைவடைந்திருந்த நிலையில் 2020ஆம் ஆண்டு ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தின் பின்னர் பயங்கரவாத தடைச்சட்டத்தை விட மிக மிக மோசமானதும், கொடூரமானதுமான பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட வரைவு கிடப்பில் போடப்பட்டது.

இப்போது மீண்டும்  பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவதாக வாக்குறுதியளித்து பயங்கரவாதத் தடைச் சட்டம் என்ற பெயரை மட்டும் மாற்றிவிட்டு தேசிய பாதுகாப்புச் சட்டம் என்ற ஒன்றைக் கொண்டு வருவதற்கான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இச்சட்டம் நிச்சயமாக பயங்கரவாதத் தடைச்சட்டத்தை விட பன்மடங்கு மோசமானதாக அமையும் சாத்தியகூறுகள் காணப்படுகின்றன.-என்றுள்ளது. (அ)

# எரிபொருள் கப்பல்களுக்கு பணத்தை செலுத்தவில்லை

கொழும்பு, செப். 15

இலங்கைக் கடலில் நங்கூரமிடப்பட்டுள்ள எரிபொருள் கப்பல்களுக்கு டொலர் தட்டுப்பாடு காரணமாக பணம் செலுத்த முடியவில்லை என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

மூன்று வாரங்களுக்கு மேலாக கொழும்பு துறைமுகத்தில் ஒரு மசகு எண்ணெய் கப்பல் நங்கூரமிடப்பட்டுள்ளதாகவும் குறித்த கப்பலுக்கான பணத்தை இலங்கை இன்னும் செலுத்தவில்லை எனவும் அந்த கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

மேலும் டீசல் ஏற்றி வந்த இரண்டு கப்பல்கள் ஒரு வாரத்துக்கும் மேலாக கொழும்புத் துறைமுகத்தில் நங்கூரமிட்டுள்ளன.

கப்பல்களுக்கு பணம் செலுத்துவதற்கு தேவையான டொலர்களை பெற்றுக்கொள்வதற்கு இலங்கை மத்திய வங்கியுடன் கலந்துரையாடி நடவடிக்கை எடுக்கப்படும் என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (அ)

# திருமுறை விண்ணப்பம்!

யாழ்ப்பாணம், செப். 15

“சிவநெறிய திருமுறை விண்ணப்பம்” - தொடர் 80 இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

இலங்கை நேரம் இரவு 7 மணிக்கு இடம்பெறும் இந்த நிகழ்வில் யாவரும் இணைந்து கொள்ள முடியும்.

இந்த நிகழ்வில் சூம் செயலி மூலம் 417 892 9023 என்ற அடையாள எண்ணில், 202811 என்ற கடவுச்சொல்லைப் பயன்படுத்தி இணை முடியும்.

அல்லது, Dr sivasri vytheeswara kurukkal என்ற யூ-ரியூப் சனல் மூலமும் பார்வையிட முடியும். (ஐ)

# சிறப்புச் சொற்பொழிவுகள்

யாழ்ப்பாணம், செப். 15

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் ஆண்டில் அவர், குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துமுகமாக நடத்தப்படும் வாராந்த சொற்பொழிவும் - மாதந்த நாயன்மார் குருபூஜை நிகழ்வு கனடாவின் ரொறன்ரோவில் வசிக்கும் சிவஸ்ரீ பால. திருகுணானந்த குருக்களின் அனுசரணையில் நடக்கிறது.

இந்த நிகழ்வின் வரிசையில், சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் 37ஆவது சொற்பொழிவு தாவடி ஸ்ரீ ஆதிகாளி அம்மன் அறநெறிப் பாடசாலை மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை மாலை 3.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில், “தம் சமூகம் வாழச் சேவகம் செய்த நாவலர் பெருமான்” எனும்  தொனிப் பொருளில்  சைவப்புலவர் பொன். சந்திரவேல் சொற்பொழிவாற்றுவார். நிறைவில் வினாக்கள் தொடுக்கப்பட்டு மாணவர்களுக்கு பாராட்டு பரிசில்கள் வழங்கப்படும். (ஐ)

■ ■ ■

யாழ்ப்பாணம், செப். 15

நீர்வேலி அருள்மிகு கந்த சுவாமி ஆலயத்தில் நடத்தப்படும் வாராந்த சிறப்புச் சொற்பொழிவு கோயிலின் சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு நடைபெறும்.

சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறும் இந்த நிகழ்வில் தலைமை உரையை பரிபாலன சபைத் தலைவர் த. சோதிலிங்கம் ஆற்றுவார்.

சிறப்புச் சொற்பொழிவை இளம்சைவப்புலவர் க. கயிலைவாசன் “முருகப்பெருமானின் அருளாளர்கள்” என்ற தலைப்பில் ஆற்றுவார். (ஐ)

Eelanadu
15.09.2022 வியாழக்கிழமை
பிலவ வருடம், ஆவணி 30

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
**தொலைபேசி : 021 730 1370**

## பிரேரணை: புரிந்து கொண்டால் தடுமாற வேண்டியதில்லை

ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது கூட்டத் தொடரில் இலங்கைமீதான பிரேரணையின் பூச்சிய வரைபு வெளியாகியிருக்கின்றது. தமிழ்த் தேசியக் கட்சிகளும் ஏராளமான புலம்பெயர் அமைப்புக்களும் தொடர்ந்தும் வலியுறுத்திவரும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்குப் பாரப்படுத்தும் விடயம் முன்னரைப் போலவே, இப்போதும் நிராகரிக்கப்பட்டிருக்கின்றது. 46/1 பிரேரணையில் குறிப்பிடப்பட்டிருக்கும் விடயங்களே மீளவும் வலியுறுத்தப்பட்டிருக்கின்றன.

இந்த விடயம் தொடர்பில் தமிழ் தரப்புக்கள் அதிருப்தி அடைந்திருக்கின்றன. 2012இல், அமெரிக்க ஆதரவுப் பிரேரணை வெளிவந்ததைத் தொடர்ந்து, இவ்வாறான நம்பிக்கைகளை முன்வைப்பதும் - பின்னர் தாங்கள் எதிர்பார்த்தது போன்று கருமங்கள் இடம்பெறாதபோது அவநம்பிக்கை வெளியிடுவதுமே வழக்கமாக இருக்கின்றது.

இலங்கையின் இறுதிக்கட்டப் போரின்போது இடம்பெற்றதாக நம்பப்படும் போர் குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்களுக்கான நீதி தொடர்பிலேயே தமிழ்த் தரப்புக்கள் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றன. போர் குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்களுக்கான நீதியைப் பெற வேண்டுமாயின், இலங்கை விவகாரம் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்லப்பட வேண்டும். ஆனால், இந்த விடயத்தில் சர்வதேச சமூகம் சாதகமான பார்வையைக் கொண்டிருக்கவில்லை. ஆனால், ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் தனது அறிக்கையில் இலங்கை விவகாரத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்குப் பாரப்படுத்த வேண்டும் என்னும் கோரிக்கையை முன்வைத்திருந்தார். இதனைத் தொடர்ந்து தாங்கள் இதுவரையில் கூறிவந்த விடயம் கருத்தில் கொள்ளப்பட்டு விட்டதாக சிலர் வாதிட்டனர். இதே வேளை, தங்களுடைய அழுத்தங்களின் காரணமாகவே ஆணையாளர் இவ்வாறானதொரு காட்டமான அறிக்கையை வெளியிட்டதாகவும் சிலர் வாதிட்டனர். ஆனால், உண்மையோ வேறு.

அதாவது, ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளரைப் பொறுத்தவரையில், 2012இலிருந்து தொடர்ச்சியாக பொறுப்புக் கூறலை வலியுறுத்தி பேரவை அழுத்தங்களைப் பிரயோகித்து வருகின்றது. ஆனால், எதிர்பார்த்த முன்னேற்றங்களை பேரவையால் உறுதிப்படுத்த முடியவில்லை. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் கடந்த கூட்டத் தொடரின் போது, சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் தொடர்பில் ஆணையாளர் உச்சரித்திருந்தார். ஆனால், ஆணையாளர் வலியுறுத்தியவுடன் விடயங்கள் நடந்துவிடப் போவதில்லை. ஏனெனில், பேரவையின் ஆணையாளரால் பரிந்துரைகளை மட்டுமே முன்வைக்க முடியும். பேரவையின் அங்கத்துவ நாடுகளே பிரேரணையை இறுதி செய்யும். இந்த அடிப்படையில்தான் இதுவரையிலான பிரேரணைகள் வெளிவந்திருக்கின்றன.

பேரவையின் முடிவுகள் என்பது, இறுதியில் பேரவையில் அங்கத்துவம் வகிக்கும் பலமான நாடுகளின் உலகளாவிய - பிராந்திய நலன்களின் அடிப்படையிலேயே தீர்மானிக்கப்படும். இலங்கையின்மீதான பிரேரணையின் உள்ளடக்கத்தை உற்றுநோக்கினால் ஒரு விடயத்தை அவதானிக்கலாம் - அதாவது, இலங்கையை முழுமையாக தனிமைப்படுத்திவிடக்கூடாது என்னும் கரிசனையுடன் கூடவே, இலங்கைமீதான தங்களின் பிடியையும் கைவிட்டுவிடக் கூடாது என்னும் அடிப்படையிலேயே பிரேரணையின் உள்ளடக்கம் தீர்மானிக்கப்படுகின்றது. இதனைப் புரிந்துகொண்டால் கலக்கமடைய வேண்டியதில்லை.

சர்வதேச சமூகம் என்பது அடிப்படையில் பலம்பொருந்திய நாடுகளாகும். குறிப்பாக அமெரிக்கா, இந்தியா, பிரித்தானியா போன்ற நாடுகள்தான் சர்வதேச சமூகத்தின் முடிவு என்னும் அடிப்படையில் விடயங்களை தங்களின் விருப்பு வெறுப்புகளிலிருந்து தீர்மானிக்கின்றன. மேற்கு உலகைப் பொறுத்தவரையில் அமெரிக்காவின் ஈடுபாடே முதன்மையானது. பிராந்தியத்தைப் பொறுத்தவரையில் இந்தியாவின் தீர்மானங்களே முதன்மையானது. இந்த நிலையில் தமிழர் தரப்புக்கள் எவ்வாறான கோரிக்கைகளை முன்வைத்தாலும் இறுதியில், நாம் மேலே குறிப்பிட்டவாறான ஒழுங்கின் ஊடாகவே விடயங்கள் தீர்மானிக்கப்படும். இதனை புரிந்து கொண்டால் தடுமாற வேண்டியதில்லை.

# யாழ். மாநகர சபையின் புதிய கட்டட நிர்மாணத்துக்கு நிதி ஒதுக்கீடு செய்க!

## ஜனாதிபதி ரணிலுக்கு பிரதி முதல்வர் கடிதம்

*யாழ்ப்பாணம், செப். 15*

உள்நாட்டு யுத்தத்தால் அழிக்கப்பட்ட யாழ். மாநகர சபையின் புதிய கட்டடத் தொகுதியை நிர்மாணிப்பை துரிதப்படுத்துவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யுமாறு கேட்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு யாழ். மாநகர சபை பிரதி முதல்வர் து. ஈசன் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில், உள்நாட்டு யுத்தம் காரணமாக அழிக்கப்பட்ட யாழ். மாநகர சபைக்கான புதிய கட்டடத் தொகுதியை நிர்மாணிப்பதற்கு அரசாங்கத்தால் ஏற்கப்பட்ட பொறுப்பையும், முன்முயற்சியையும் நான் நேர்மையுடன் வரவேற்கின்றேன். தங்களுடைய உன்னத முயற்சிக்காக தங்களுக்கு மிகவும் நன்றி தெரிவிக்கின்றேன்.

சபையின் புதிய கட்டடத் தொகுதிக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு தாங்கள் பிரதமராக இருந்த போது தங்களுடைய ஆதரவில் மாநகர சபையின் முன்னாள் முதல்வரின் பங்குபற்றலோடு 07.07.2019 அன்று நடைபெற்றது.

நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியில் புதிய கட்டடத் தொகுதியை கட்டி முடிப்பதற்கு 2,350 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு இருந்தது. எவ்வாறாயினும் தங்களுடைய முயற்சியின் விளைவாக இந்தத் திட்டத்துக்கு மாநகர சபைக்கு 800 மில்லியன் ரூபாய் வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் தங்களுடைய சளைக்காத முயற்சியை நான் பாராட்டுகின்றேன்.

தற்போது முன்னெப்போதும் ஏற்படாத அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக திட்டத்தை பூர்த்தி செய்வதற்கான முயற்சி தடைப்பட்டிருக்கிறது. எனவே, தற்போதைய கட்டட மூலப்பொருள் விலையேற்றத்துக்கு அமைவாக நிதி ஒதுக்கீடு செய்தல் மிகவும் அவசியமானதாகும்.

உண்மையில் மாநகர சபைக் கட்டடம் ஆயுதப் போர் காரணமாக அழிக்கப்பட்டிருந்தது. அப்போதிலிருந்து நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கு சொந்தமான இடத்தில் தற்காலிகமாக இயங்கி வருகிறது.

அது தவிர, யாழ். மாநகர சபை நிர்வாகத்துக்கு நிரந்தரமான கட்டடத் தொகுதியை கொண்டிருப்பது உள்ளூர் பொருளாதாரத்தில் உள்ளூர் சமூகத்தின் பங்களிப்பை உருவாக்கும் வாய்ப்புக்களை உருவாக்குகிறது. இதேநேரம் ஒரே கூரையின் கீழ் யாழ் மாநகர சபையின் பொது மக்களுக்கான சேவைகளை மிகச் சிறந்த முறையில் வழங்கும் வாய்ப்பை விரிவுப்படுத்துகிறது.

மேற்கூறியவாறு இந்தத் திட்டத்தின் விருத்தியிலும் பூர்த்தி செய்வதிலும் மிக்க கூடிய விரைவில் தங்களது விசேட கவனத்தை செலுத்துவீர்கள் என்று எதிர்பார்க்கின்றேன் - என்றுள்ளது. (ஐ)

## கடை உடைத்து பொருட்கள் திருட்டு

*யாழ்ப்பாணம், செப். 15*

கல்வியங்காடு ஆடியபாதம் வீதியில் உள்ள வர்த்தகநிலையம் ஒன்றுக்குள் புகுந்த திருடர்கள் 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்களை களவாடிச் சென்றுள்ளனர்.

நேற்று நள்ளிரவு வேளை இடம்பெற்ற இந்தத் திருட்டுச் சம்பவம் குறித்து மேலும் அறிய வருவதாவது,

குறித்த வர்த்தக நிலையத்தின் கதவை உடைத்து நுழைந்தவர்கள். அரிசி மூட்டை, பால்மா பெட்டிகள், கோதுமை மா, எண்ணெய், பிஸ்கெற் எனப் பொருட்களை களவெடுத்துச் சென்றனர்.

இந்தக் களவு சம்பவம் குறித்து கடையின் உரிமையாளர் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ஐ)

## பாராளுமன்றை பார்வையிட 20ஆம் திகதி முதல் அனுமதி!


*கொழும்பு, செப். 15*

கோவிட் தொற்று பரவல் மற்றும் பாதுகாப்பு காரணங்களுக்காக பாராளுமன்றத்தை பார்வையிடுவதற்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகளைத் தளர்த்துவதன் அவசியம் குறித்து, நேற்று நடைபெற்ற பாராளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பான குழுவில் படைக்கல சேவிதர் முன்வைத்த பிரேரணை அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் எதிர்வரும் 20ஆம் திகதி முதல் பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட பாராளுமன்றத்தைப் பார்வையிட விரும்பும் தரப்பினருக்கு பாராளுமன்ற கட்டடத்தொகுதி மற்றும் பார்வையாளர் பகுதியை (கலரி) பாராளுமன்ற அமர்வு இடம்பெறாத நாட்களில் காலை 9.30 மணி முதல் 3மணி வரை (விடுமறை நாட்கள் தவிர்ந்த) பார்வையிட அனுமதிக்கப்படுவார்கள்.

இது தொடர்பான விண்ணப்பத்தை கடிதம் அல்லது தொலை நகல் இலக்கமான 011 277 7473, 011 277 7335 அல்லது இணையத்தள முகவரியான www.parliament.lk ஊடாக படைக்கல சேவிதருக்கு அனுப்பலாம் என படைக்கல சேவிதர் ஊடகப் பிரிவு விடுத்திருக்கும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
உங்கள் செயல்கள் வெற்றியாகும். நண்பர்களின் ஆதரவுடன் நினைத்ததை சாதிப்பீர்கள். நீண்ட நாள் எண்ணம் ஒன்று இன்று நிறைவேறும். பொருளாதார நிலை உயரும். உங்கள் எண்ணம் நிறைவேறும்.

**இடபம்**
அலைச்சலும் செலவும் அதிகரிக்கும் என்றாலும் எதிர்பார்த்தவற்றில் லாபம் கிடைக்கும். வெளியூர் பயணத்தால் நன்மை ஏற்படும். குடும்பத்திற்காக செலவு அதிகரிக்கும். செலவுகளால் நெருக்கடி அதிகரிக்கும்.

**மிதுனம்**
தடைபட்டிருந்த பணம் வந்து சேரும். கொடுக்கல் வாங்கல் நிலை சீராகும். பிரச்னை நண்பர்களால் விலகும். வருமானம் அதிகரிக்கும். எதிர்பார்த்த தகவல் வந்து சேரும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும்.

**கடகம்**
வியாபாரத்தில் இருந்து வந்த தடை விலகும். பண வரவால் மகிழ்ச்சி அதிகரிக்கும். வேலை வாய்ப்பிற்காக மேற்கொண்ட முயற்சி வெற்றியாகும். மனதில் தைரியம் உண்டாகும்.

**சிம்மம்**
உங்கள் முயற்சி கடைசி நேரத்தில் இழுபறியாகும். நிதானமுடன் செயல்படுவதால் நன்மையுண்டு. உங்கள் ஆற்றல் வெளிப்படும் நாள். திறமையுடன் செயல்பட்டு எதிர்பார்த்தவற்றில் லாபம் அடைவீர்கள்.

**கன்னி**
நீங்கள் விரும்பாத செயல் இன்று நடக்க வாய்ப்புண்டு. விழிப்புணர்வு தேவைப்படும் நாள். உங்கள் செயல்களில் எதிர்ப்பு வலுக்கும். பொதுக்காரியத்தில் தடை காண்பீர்கள். மனதில் குழப்பம் அதிகரிக்கும்.

**துலாம்**
புதிய முயற்சி ஒன்றில் ஈடுபட்டு ஆதாயம் காண்பீர்கள். மகிழ்ச்சி அதிகரிக்கும். நண்பர்களின் துணையுடன் செயலில் வெற்றி காண்பீர்கள். ஆதாயமான நாள். உங்கள் செயல்களில் இன்று தெளிவு பிறக்கும்.

**விருட்சிகம்**
எதிரிகளின் தொல்லைகள் விலகும். உங்கள் முயற்சியில் போராடி வெற்றியடைவீர்கள். அலுவலகத்தில் இருந்த மறைமுக எதிரிகள் இடம் மாறுவர். உங்கள் செல்வாக்கு உயரும். மற்றவர்களை அனுசரித்து செல்வீர்கள்.

**தனுசு**
அவசர செயல்களில் அனுகூலம் இல்லாமல் போகும். குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். சொத்து விவகாரத்தில் நீங்கள் எதிர்பார்த்த நன்மைய அடைய முடியாமல் போகும். பிள்ளைகள் நலனில் அக்கறை செலுத்துவீர்கள்.

**மகரம்**
யோசித்து செயல்பட வேண்டிய நாள். அறிமுகம் இல்லாதவருடன் எந்தவொரு செயலிலும் ஈடுபட வேண்டாம். இன்று மற்ற வரின் வார்த்தைகளைக் கேட்டு மனதை அலைபாய விடாதீர்கள்.

**கும்பம்**
உங்கள் செல்வாக்கு பொது இடங்களில் உயரும். குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். உங்கள் எண்ணப்படி செயல்பட்டு நினைத்ததை அடைவீர்கள். குடும்பத்தில் செல்வாக்கு உயரும். துணிச்சலுடன் செயல்பட்டு நினைத்ததை சாதிப்பீர்கள்.

**மீனம்**
புதிய முதலீடுகள் இன்று வேண்டாம். பண விவகாரங்களில் கவனம் தேவை. குடும்பத்தினர் வழியில் எதிர்பாராத செலவு ஏற்படும். மனதில் குழப்பம் அதிகரிக்கும். அரசு வழி முயற்சியில் லாபம் ஆகும்.

# சகல வசதிகளுடன் ஈழத் தமிழருக்கு திண்டுக்கல்லில் மறுவாழ்வு முகாம்!

## முதல்வர் ஸ்டாலின் திறந்து வைத்தார்

*சென்னை, செப். 15*

முதன்முறையாக இலங்கை தமிழர்களுக்காக அனைத்து வசதிகளுடன் மறுவாழ்வு முகாம் நேற்றுத் தொடங்கி வைக்கப்பட்டது.

திண்டுக்கல் மாவட்டத்தில் முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் சென்னையில் இருந்து மெய்நிகர் வழியே புதிய குடியிருப்புகளை தொடங்கி வைத்தார்.

இந்த வீடுகள் தோட்டனூத்து, அடியனூத்து, கோபால்பட்டியில் உள்ள முகாம்களை ஒருங்கிணைத்து கட்டப்பட்டுள்ளன. மேலும், உள்கட்டமைப்பு வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. 17. 84




கோடி (இந்திய) ரூபாய் செலவில் தலா 300 சதுர அடியில் 321 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன.

நூலகம், குடிநீர் மேல்நிலைத் தொட்டி, பூங்கா உள்ளிட்ட வசதிகளு டன் மறுவாழ்வு முகாம் குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 18ஆவது ஆண்டில் தே. மு. தி. க. விஜயகாந்த் விசேட அறிக்கை!

*சென்னை, செப். 15*

“கட்சி ஆரம்பித்த நாள் முதல் இன்று வரை யாரிடமும் பணத்தை வசூல் செய்யாமல், சொந்த உழைப்பில் வியர்வை சிந்தி சம்பாதித்த பணத்தைக் கொண்டுதான் கட்சியை வளர்த்து வருகிறோம். இதற்கு நமக்கு கிடைத்த கழகத்தின் நரம்புகளாகவும், இரத்த நாளங்களாகவும் செயல்படும் தொண்டர்கள்தான் காரணம்” என்று தே. மு. தி. க. நிறுவுநர் தலைவர் விஜயகாந்த் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: ”பல்வேறு சவால்களைத் தாண்டி நல்ல நோக்கத்துக்காகத் தொடங்கப்பட்ட கட்சி நமது தேசிய முற்போக்கு திராவிட கழகம். நமது கட்சி தொடங்கி 17 ஆண்டுகள் முடிடைந்து இன்று (நேற்று) 18ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது. கடந்த 2005 ஆம் ஆண்டு தமிழக மக்களின் ஏகோபித்த ஆதரவுடன் தொடங்கப்பட்ட தேமுதிக தொடர்ந்து மக்களுக்காக மக்கள் பணி ஆற்றி தமிழ்நாட்டு மக்களின் இதயங்களில் தனக்கென ஓர் இடத்தை பிடித்துள்ளது.

தே. மு. தி. கவுக்கு என்றுமே ஒரு தனி வரலாறு உண்டு. சாதி, மதம் ஆகியவற்றுக்கு அப்பால்பட்ட கட்சியாக தமிழ்நாட்டில் தொடங்கப்பட்டது. தமிழ்நாட்டு மக்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்னைகளை தீர்த்து வைப்பதற்கு தொடங்கப்பட்ட இயக்கமாகும். எந்தக் கட்சியில் இருந்தும் பிரிந்து வராமல் சாதி, மதத்தை வைத்து கட்சி ஆரம்பிக்காமல் சுயம்புவாக மக்களுக்காவே ஆரம்பிக்கப்பட்ட நமது கட்சி இன்றைக்கு அங்கீகரிக்கப்பட்ட கட்சியாக தமிழகம் முழுவதும் கிளைகள் மற்றும் பூத்துகளை அமைத்து வெற்றிநடை போடுகிறது.


வருகிற 2024 பாராளுமன்றத் தேர்தலில் தே. மு. தி. கவின் பலத்தை நாம் அனைவருக்கும் நிச்சயமாக நிரூபிப்போம்” - என்றும் கூறியுள்ளார். (ஐ)

# தாமிரபரணி நதியின் கரையில் 100 தொல்லிடங்கள் அடையாளம்!

*சென்னை, செப். 15*

தாமிரபரணி நதிக்கரையோரப் பகுதிகளில் ஆதிச்சநல்லூர், சிவகளை மற்றும் கொற்கை உள்ளது. இந்த பகுதிகளில் அனைத்தும் தற்போது தொல்லியல் வரலாறுகளில் முக்கிய பகுதிகளாக உள்ளது. குறிப்பாக ஆதிச்சநல்லூரில்தான் இந்தியாவிலேயே முதன் முதலில் அகழாய்வு பணிகள் நடந்தது.

ஆங்கிலேய ஆய்வாளர் அலெக்சாண்டர் ரியா என்பவர் ஆதிச்சநல்லூர், கொற்கை உள்பட 38 இடங்களில் தூத்துக்குடி மாவட்டத்தில் தொல்லியல் இடங்கள் உள்ளன என்றும், அதில் 21 இடங்கள் இறந்தவர்களை புதைக்கப் பயன்படுத்திய பரம்பு பகுதிகளாகவும், 17 இடங்கள் மக்கள் வாழ்ந்ததை உறுதிப்படுத்தும் வாழ்விடப் பகுதிகளாக இருந்தன என்று அறிக்கைகளிலும், குறிப்புகளிலும் கூறியுள்ளார்.



கடந்த வருடம் தமிழக அரசு தொல்லியல் ஆய்வாளர் தங்கதுரை தலைமையில் ஒரு குழுவினரை கொண்டு பாபநாசத்தில் இருந்து புன்னக்காயல் வரை தாமிரபரணி நதி பாயும் பகுதியின் இருபுறமும் உள்ள கிராமங்களில் கள ஆய்வு மேற்கொண்டு எந்தெந்த கிராமங்களில் தொல்லியல் அடையாளங்கள் உள்ளன என்பதை அறிக்கையாக சமர்பிக்கும்படி தெரிவித்திருந்தது.

இந்தப் பணிகள் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது. தற்போது கிராமங்களில் உள்ள கோவில்களில் கல்வெட்டுகளை ஆய்வு செய்யும் பணி நடந்து வருகிறது. இதனிடையே பாபநாசம் தொடங்கி தாமிபரணி ஆறு கடலில் கலக்கும் புன்னக்காயல் வரை 100இற்கும் மேற்பட்ட தொல்லியல் இடங்கள் இருக்கின்றன என்று ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

ஏற்கனவே தாமிரபரணிக் கரை நாகரிகம் மிகவும் தொன்மையான நாகரிகம் என்பதை சிவகளை அகழாய்வின் அறிக்கைகள் மூலம் வெளி உலகத்துக்குக் கொண்டு வந்தது. (ஐ)

# தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை குறித்து ஏமாற்றம்

## கூறுகிறார் முருகையா கோமகன்

யாழ்ப்பாணம், செப். 15

தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படுவது தொடர்பாக ஜனாதிபதியினால் வாக்குறுதி அளிக்கப்பட்டிருந்தது. அந்த வாக்குறுதியாலும் ஏமாற்றப்பட்டு இருக்கிறோம் என குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் முருகையா கோமகன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேசிய கைதிகள் தினத்தையொட்டி 417 சிறைக்கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர். இதில் ஒரு தமிழரசியல் கைதியும் விடுவிக்கப்படவில்லை. 46 தமிழரசியல் கைதிகள் வீட்டுக்கு திரும்புவார்கள் என எதிர்பாத்து காத்திருந்தவர்களுக்கு ஏமாற்றமே மிஞ்சி இருந்தது.

கடந்த மாதம் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க பொதுமன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டிருந்தார். அந்த அடிப்படையில் தமிழரசியல் கைதிகள் விடுவிக்கப்படுவார்கள் என்று எதிர்பார்த்து இருந்தோம். ஆனால் அதுவும் இடம்பெறவில்லை தொடர்ச்சியாக ஏமாற்றத்தையே சந்தித்துக்கொண்டிருக்கிறோம்.

தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படுவது தொடர்பாக ஜனாதிபதியினால் வாக்குறுதி அளிக்கப்பட்டிருந்தது. அந்த வாக்குறுதியாலும் ஏமாற்றப்பட்டு இருக்கிறோம்.

இந்த விடயம் சம்பந்தமாக அனைத்து தரப்பினரும், தமிழ் பேசும் மக்களுடைய பிரதிநிதிகள் இந்த விடயத்தில் உடனடியாக செயல்படுவதற்கான சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும் என கேட்டுக்கொள்கிறோம்.

கொழும்பு மகசின் சிறைச்சாலையில் உணவு தவிர்ப்பில் ஈடுபட்டுவரும் இளைஞர்களில் ஆறு பேரின் உடல் நிலை மோசமடைந்து வெலிக்கடை வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளதாக உறவினர்கள் கவலை தெரிவித்துள்ளனர். இதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்துடன் தொடர்புகொண்டோ அல்லது ஏதாவதொரு பொறிமுறையை பயன்படுத்தி தீர்வை பெற்றுக் கொடுக்க துறை சார்ந்தவர்கள் விரைந்து செயல்பட வேண்டும் - என்றார். (அ)

# ஐக்கிய அரபு இராச்சிய அதிபருக்கு விசேட கடிதம் அனுப்பினார் ரணில்

கொழும்பு, செப். 15

ஜனாதிபதியின் விஷேட தூதுவராக ஐக்கிய அரபு இராச்சியம் சென்றுள்ள சுற்றாடல் துறை அமைச்சர் நஸீர் அஹமட், ஐக்கிய அரபு இராச்சியத்தின் அதிபருக்கு (அமீர்) ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க எழுதிய விஷேட கடிதத்தை கையளித்தார்.

அந்நாட்டின் வெளிநாட்டு அமைச்சரும் சர்வதேச விவகாரங்களுக்குப் பொறுப்பானவருமான அப்துல் பின் ஷெய்யத் அல் நஹ்யானிடம் அக்கடிதம் கையளிக்கப்பட்டது. இரு நாடுகளின் உறவுகளைப் பலப்படுத்துவது குறித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அபுதாபியில் இடம்பெற்ற சந்திப்பில் பல தரப்பு விடயங்கள் குறித்து அமைச்சர் நஸீர் அஹமட்டும், ஐக்கிய அரபு இராச்சியத்தின் வெளிநாட்டு அமைச்சரும் கலந்துரையாடினர்.

இச்சந்திப்பில், இலங்கையின் பொருளாதார மேம்பாடுகளுக்கு ஐக்கிய அரபு இராச்சியத்தின் ஒத்துழைப்பை பலப்படுத்துவது குறித்து அமைச்சர் நஸீர் அஹமட் விளக்கினார். அத்துடன் தற்போது இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி குறித்து விளக்கிய அமைச்சர், அதற்கான தீர்வுகள் குறித்தும் எடுத்துரைத்து ஐக்கிய அரபு இராச்சியத்தின் உதவிகளை பெறுவது தொடர்பில் அக்கறை செலுத்துமாறும் கோரினார். பிராந்திய மற்றும் சர்வதேசத்தில் ஐக்கிய அரபு இராச்சியத்தின் ஒத்துழைப்புக்களுடன் பல்துறைகளில் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்திச் செயற்பாடுகள் பற்றியும் இச்சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது.

இலங்கை, இவ்வாறான விடயங்களுக்கு ஒத்துழைப்பதில் இலங்கைக்குள்ள ஆர்வங்களையும் அமைச்சர் விளக்கியமை குறிப்பிடத்தக்கது. ஐக்கிய அரபு இராச்சியத்துக்கான இலங்கைத் தூதுவர் மஹாதேவி பீரிஸூம் கலந்து கொண்டார். (அ)



# 11 வாள்களுடன் இளைஞன் வட்டுக்கோட்டையில் கைது!

யாழ்ப்பாணம், செப். 15

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட துணைவிப் பகுதியில் 11 வாள்களுடன் விசேட அதிரடிப்படையினரால் 22 வயதான இளைஞர் கைது செய்யப்பட்டார்.

நேற்று முன்இரவு 8.00 மணியளவில் இக் கைது சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட துணைவிப் பகுதியில் வாள்களைப் பயன் படுத்தி கட்டுச் சொல்லும் கோவிலொன்றில் வாள்களை உடைமையில் வைத்திருப்பதாக யாழ்ப்பாணம் விசேட அதிரடிப்படையினருக்கு தகவல் கிடைத்தது.

சம்பவ இடத்துக்கு விரைந்த அதிரடிப்படையினர் 11 வாள்களை கைப்பற்றியதோடு குறித்த வாள்களை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் 22 வயது இளைஞனை கைது செய்து வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

இவை தமது பூசை வழிபாடுகளுக்கு பயன்படுத்தப்படுவதாக கைதான இளைஞனின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர். இவரின் தந்தையே ஆலயத்தில் பூசைகளில் ஈடுபடுவர்.

மேலதிக விசாரணைகளை வட்டுக்கோட்டை பொலிசார் முன்னெடுத்துள்ளனர். (அ)

# அலி சப்ரியை ஜெனிவாவில் சந்தித்த சீனாவின் பிரதிநிதி

கொழும்பு, செப். 15

மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது அமர்வில் கலந்து கொள்வதற்காக ஜெனிவா சென்றிருந்த இலங்கை வெளிவிவகார அமைச்சர் சப்ரியை ஜெனிவாவில் உள்ள ஐக்கிய நாடுகள் அலுவலகம் மற்றும் சுவிட்சர்லாந்தில் உள்ள சர்வதேச அமைப்புகளுக்கான சீனாவின் நிரந்தரப் பிரதிநிதியான தூதுவர் சென் சூ சந்தித்தார்.

சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையே நீண்டகால நட்புறவு பாரம்பரியம் இருப்பதாகவும், இலங்கை தற்போது எதிர்நோக்கும் சிரமங்களுக்கு சீனத் தரப்பு கவலையை தெரிவிப்பதாகவும் தூதுவர் சென் சூ இதன்போது குறிப்பிட்டார். (அ)

# மானிப்பாயில் போதைப்பொருளை நுகர்ந்துகொண்டிருந்த 4 பேர் கைது!

யாழ்ப்பாணம், செப். 15

மானிப்பாய், சுதுமலைப் பகுதியில் வைத்து போதைப் பொருளை நுகர்ந்து கொண்டிருந்த நான்கு பேரை நேற்று அதிகாலை 2 மணியளவில் யாழ். மாவட்ட பொலிஸார் கைது செய்ததுடன், அவர்கள் வசமிருந்த 61 கிராம் போதைப் பொருளையும் கைப்பற்றினர்.

யாழ்.மாவட்ட பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட நான்கு பேரும் கைப்பற்றப்பட்ட போதைப்பொருளுடன் மானிப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் மூவர் யாழ்ப்பாணத்தையும் ஒருவர் கொழும்பையும் சேர்ந்தவரென தெரியவருகிறது.

கைது செய்யப்பட்டவர்கள் போதைப்பொருள் வியாபாரிகள் எனச் சந்தேகம் வெளியிட்ட பொலிஸார், விசாரணைகளுக்கு பின்னர் சந்தேக நபர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளனர். (அ-3)

# மின்சார வாகன இறக்குமதிக்கு அனுமதி பெறுவதற்கு ஏற்பாடு



கொழும்பு, செப். 15

மின்சார வாகன இறக்குமதி அனுமதிப் பத்திரங்களை பெறுவது தொடர்பான தகவல்களை பெற்றுக் கொள்வதற்காக மூன்று தொலைபேசி இலக்கங்களை தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு அறிமுகப்படுத்தியுள்ளது.

இதன்படி,0773 039 034அல்லது0112 368 175என்ற தொலைபேசி இலக்கத்திலோ அல்லது 0112 582 447என்ற அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் (கட்டுப்பாட்டு பிரிவு பிரதாபோத காகொட ஆராச்சிக்கு தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தி தேவையான தகவல்களை பெற்றுக் கொள்ள முடியும் எனவும் அறிவித்துள்ளது.

புலம்பெயர் தொழிலாளர்கள் உத்தியோகபூர்வ வழிகளில் நாட்டிற்கு அனுப்பும் பணத்தின் அடிப்படையில் மின்சார வாகனத்தை இறக்குமதி செய்வதற்கு தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார அண்மையில் அமைச்சரவையின் அனுமதியைப் பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அதன்படி, 2022 மே 1 தொடக்கம் 2023 ஏப்ரல் 30 வரை உத்தியோகபூர்வ முறைகளினூடாக 3000 அமெரிக்க டொலர்களுக்கு மேல் அனுப்பிய புலம்பெயர்ந்த தொழிலாளிக்கு, அனுப்பப்பட்ட தொகையை 50 சதவீதம் குறைவான சி.ஐ.எவ் மதிப்புள்ள மின்சார மோட்டார் சைக்கிளை இறக்குமதி செய்வதற்கான உரிமம் வழங்கப்படும் எனவும் குறிப்பிட்டு இருந்தார்.

இதற்கிடையில், 2022 மே 1 தொடக்கம் 2022 டிசெம்பர் 31 வரை 20 ஆயிரம் அமெரிக்க டொலர்களுக்கு மேல் பரிமாற்றம் செய்தவர்களுக்கு மின்சார காரை இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்படும் எனவும் தெரிவித்திருந்தார்.

அதன்படி, மின்சார கார், டபுள் கப், வான் அல்லது டிப்பர் ட்ரக் போன்றவற்றை இறக்குமதி செய்வதற்கான வாய்ப்பு வழங்கப்படும் எனவும் கூறியுள்ளார்.

உரிய வாகன இறக்குமதி அனுமதிப்பத்திரங்களை பெறுவதற்கான விண்ணப்பங்கள் தற்போது தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சின் இணையத்தளத்திலும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் இணையத்தளத்திலும் வெளியிடப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களை பூர்த்தி செய்து உரிய அனைத்து ஆவணங்களுடன் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சிடம் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (அ)

# சிவில் சமுக செயற்பாட்டாளர்களை துன்புறுத்துவதை நிறுத்தவேண்டும்!

## மன்னாரில் நேற்று கண்டனப் போராட்டம்




மன்னார், செப். 15

வடக்கு - கிழக்கில் மக்களுக்காக குரல் கொடுத்து வரும் மனித உரிமை மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்களை துன்புறுத்துவதை நிறுத்தக் கோரியும்,குறித்த சம்பவங்களுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் வடக்கு,கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் வடக்கு கிழக்கில் ஏற்பாடு செய்யப்பட்ட எதிர்ப்பு போராட்டம் நேற்று புதன்கிழமை காலை மன்னாரில் இடம்பெற்றது.

மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் ஒழுங்கமைப்பில் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் மன்னார் பஜார் சுற்றுவட்ட பகுதியில் இந்த எதிர்ப்பு போராட்டம் இடம்பெற்றது.

இதன்போது போராட்டத்தில் சமூக செயற்பாட்டாளர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசியல் கைதிகளின் உறவுகள் ,காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள்,அரசியல் பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டனர்.

குறித்த போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மனித உரிமை செயற்பாட்டாளர்களை துன்புறுத்துவதை நிறுத்து,தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய், இலங்கை அரசே பயங்கரவாத தடை சட்டத்தை நீக்கு,எமது நிலம் எமக்கு வேண்டும், கருத்துச் சுதந்திரம் எமது உரிமை உள்ளிட்ட பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

(அ)

# ஜூலை 9 தாக்குதல் மேலும் 05 பேர் கைது!

கொழும்பு, செப். 15

கடந்த ஜூலை 09 ஆம் திகதி இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் மேலும் ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் நேற்று முன்தினம் குருநாகல் குற்றவியல் விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வாரியபொலவில் அமைந்துள்ள பாராளுமன்ற உறுப்பினர் டீ .பி ஹேரத்தின் வீட்டுக்கு சேதம் ஏற்படுத்தியதாக தெரிவித்து 19 முதல் 36 வயதிற்கிடைப்பட்ட நால்வர் கைது செய்யப்பட்டனர்.

அத்துடன் 55 வயதுடைய மெல்சிரிபுர பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

(அ)

# ஐந்தாண்டு விடுமுறைத் திட்டம் ஆசிரியர்களுக்கு பொருந்தாது

கொழும்பு, செப். 15

அரச ஊழியர்கள் ஐந்தாண்டு கொடுப்பனவு இல்லாத விடுமுறை வழங்குவது தொடர்பான சுற்றறிக்கை, பாடசாலை ஆசிரியர்கள், சுகாதாரத்துறை ஊழியர்கள் மற்றும் தொழில்நுட்ப சேவைகள் நிபுணர்கள் போன்ற பிரிவினருக்கு பொருந்தாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் எம்.எம்.பி.கே. மாயாதுன்னே இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த நீண்ட கால விடுமுறைக்கான சுற்றறிக்கையை அரசாங்கம் பல்வேறு நிறுவனங்களில் உள்ள மேலதிகமான ஊழியர்களை விடுவிப்பதற்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.(அ)

# வேகக்கட்டுப்பாட்டை இழந்து விபத்திற்குள்ளானது டிராக்டர்

## குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழப்பு

முல்லைத்தீவு, செப். 15

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேசத்திற்கு உட்பட்ட முத்தையன் கட்டுப்பகுதியில் வயல் உழுவதற்காக உழவு இயந்திரத்தை வீதியால் செலுத்திக்கொண்டிருந்த போது உழவு இயந்திரம் வேகக்கட்டுப்பாட்டை இழந்து விபத்திற்குள்ளானதில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் மாலை முத்தையன் கட்டு எல் வி சந்திப்பகுதியில் விபத்து இடம்பெற்றுள்ளது.

வேகக்கட்டுப்பாட்டை இழந்த உழவு இயந்திரம் மின் கம்பத்துடன் மோதி விபத்திற்குள்ளாகியுள்ளது.

இதன்போது காயமடைந்த சாரதி மக்களால் மீட்கப்பட்டு ஒட்டுசுட்டான் வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனளிக்காத நிலையில் உயிரிழந்துள்ளார்.

32 வயதுடைய பெரியசாமி ராஜ்குமார் என்ற குடும்பஸ்தரே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

விபத்து தொடர்பான விசாரணையை ஒட்டிசுட்டான் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

(அ)

# மனித உரிமை செயற்பாட்டாளர்கள் மீதான அச்சுறுத்தல்களுக்கு எதிராகக் கவனயீர்ப்பு

கிளிநொச்சி, செப். 15

மனித உரிமை செயற்பாட்டாளர்கள் மீதான அச்சுறுத்தலிற்கு எதிரான கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் ஏற்பாட்டில் குறித்த போராட்டம் நேற்று காலை 9.30 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட செயலகம் முன்பாக இடம்பெற்றது.

இதன்போது, மனித உரிமை செயற்பாட்டாளர்கள் மீதான அச்சுறுத்தல் தொடர்பில் பதாதைகள் ஏந்தியிருந்ததுடன், கோசங்களையும் எழுப்பினர்.

(அ)




# 07 லட்சம் பைசர் கையிருப்பில்!



கொழும்பு, செப். 15

நாட்டில் கையிருப்பிலுள்ள பைசர் தடுப்பூசிகளை மேலும் 06 வார காலத்திற்கு மாத்திரமே பயன்படுத்த முடியும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

எனவே, நான்காவது கோவிட் தடுப்பூசியை பொது மக்கள் மிக விரைவில் பெற்றுக்கொள்ளவேண்டும் என கோவிட் 19 ஒழிப்பு தொடர்பான இணைப்பாளர் வைத்தியர் அன்வர் ஹம்தானி கோரிக்கை விடுத்துள்ளார்.

நாட்டில் 15 வீதமான மக்கள் மாத்திரமே நான்காவது கோவிட் 19 தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

நாட்டில் தற்போது 07 இலட்சம் பைசர் தடுப்பூசிகள் கையிருப்பில் உள்ளதாக கோவிட் 19 ஒழிப்பு தொடர்பான இணைப்பாளர், வைத்தியர் அன்வர் ஹம்தானி கூறியுள்ளார்.

(அ)

# நோயாளிகளின் வங்கிக் கணக்குகளில் இருந்து பணம் மோசடி செய்த மென்பொருள் பொறியியலாளர் கைது!

கொழும்பு, செப். 15

புற்றுநோய் மற்றும் சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்ட பல நோயாளிகளின் வங்கிக் கணக்குகளிருந்து ரூ.10 மில்லியன் பணத்தை மோசடி செய்த 25 வயது நிரம்பிய மென்பொருள் பொறியாளர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நிதி மோசடி தொடர்பில் பொலிஸில் பதிவு செய்யப்பட்ட ஏழு முறைப்பாடுகளின் அடிப்படையில் சந்தேகநபர் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

குறித்த இளைஞன் நோயாளிகளுடன் தொடர்பு கொண்டு அவர்களின் சுகயீனம் மற்றும் வங்கிக் கணக்குகள் தொடர்பான தகவல்களைப் பெற்று அவர்களின் சிகிச்சைக்கான வங்கிக் கணக்குகளுக்கு ரூ.100,000 பணம் வைப்பிலிடுவதாக உறுதியளித்துள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அவர் வங்கிக் கணக்கு விவரங்கள் மற்றும் பரிவர்த்தனைகளுக்கான எஸ்.எம்.எஸ் ஓ.ரி.பியைப் பெற்றுள்ளார். அதன் பிறகு நோயாளிகளின் வங்கிக் கணக்கில் இருந்து பணத்தை தனது தனிப்பட்ட கணக்குக்கு மாற்றினார்.

சிங்கப்பூரில் மென்பொருள் பொறியியல் பட்டப்படிப்பை முடித்த சந்தேகநபர், ஏறாவூர் பகுதியை சேர்ந்தவர்.

கொழும்பு, வேல வீதியில் உள்ள விடுதி ஒன்றில் தங்கியிருந்த போது கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாரின் விசாரணைகள் நிறைவடைந்ததை அடுத்து சந்தேகநபர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

(அ)

# நாட்டில் தேங்காய்க்கு செயற்கை தட்டுப்பாடு!

கொழும்பு, செப். 15

நாட்டில் தேங்காய்க்கு செயற்கை தட்டுப்பாட்டை ஏற்படுத்தி, தேங்காய் எண்ணெய்யை இறக்குமதி செய்வதற்கு சில அரச அதிகாரிகளும், வர்த்தக குழுவினரும் நடவடிக்கை எடுத்து வருவதாக அகில இலங்கை பாரம்பரிய தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

அந்த சங்கத்தின் இணைப்பாளர் புத்திக டி சில்வா தம்புள்ளையி இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது, இந்த குற்றச்சாட்டை முன்வைத்தார். (அ)

# ஜனாதிபதி ரணிலைக் கண்டு அஞ்சுகின்றன உலக நாடுகள்!

## கூறுகின்றார் வஜிர அபேவர்தன

கொழும்பு, செப். 15

**சர்வதேச நிறுவனங்களின் தேவைகளை தோற்கடிக்க வேண்டுமாயின் இலங்கையர்கள் என்ற வகையில் ஓரணியில் திரள வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்தன தெரிவித்தார்.**

ரணில் விக்கிரமசிங்கவை கண்டால் உலக நாடுகள் பயப்படும்.

ரணில் விக்கிரமசிங்கவினால், ஒரு நாட்டை கையாண்டு அதனை உயர்ந்த இடத்திற்கு கொண்டு செல்ல முடியும் என்பதை உலக நாடுகளின் தலைவர்கள் அறிவார்கள் எனவும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இதனை கூறினார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்-

உலகில் இந்தியர்கள், இந்தியர்கள் என்ற வகையில் ஒன்றிணைகின்றனர். ரஷ்யர்கள், ரஷ்யர்கள் என்ற வகையில் ஒன்றிணைகின்றனர். சீன மக்களும் தமது தேசிய அடையாளத்திற்காக ஒன்றிணைகின்றனர்.

இலங்கையர்களும் ஓரணியில் ஒன்றிணைய வேண்டும். இந்த விடயத்தில் மக்கள் அரசியல் கட்சிகளுக்கு அழுத்தங்களை கொடுக்க வேண்டும்.

அனைத்து அரசியல் கட்சிளும் இணைந்து தேசிய வேலைத்திட்டத்தை உருவாக்க அனைவரும் அழுத்தங்களை கொடுக்கவேண்டும்- என்றார். (அ)



# நாவலர் மகா வித்தியாலயத்தின் 175 ஆவது ஆண்டு விழா நேற்று

யாழ்ப்பாணம், செப். 15

யாழ். வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் 175 ஆவது ஆண்டு அங்குரார்ப்பண நிகழ்வும் நுழைவாயில் திறப்பு விழாவும் நேற்று சிறப்பாக இடம்பெற்றது.

நாவலர் தர்மகர்த்தா சபையினரால் 8 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட நுழைவாயில் நாவலர் தர்ம கர்த்தா சபையின் தலைவரும் யாழ்ப்பாணக் வலயக் கல்விப் பணிப்பாளருமான மு.ராதா கிருஷ்ணனால் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டதோடு வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தின் 175 ஆவது ஆண்டு அங்குரார்ப்பண நிகழ்வும் சிறப்பாக இடம் பெற்றது.

கல்லூரியின் அதிபர் கலியுகன் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் மூ.ராதாகிருஷ்ணன் கலந்துகொண்டதோடு சிறப்பு விருந்தினராக உடும்பிராய் இந்து கல்லூரியின் அதிபர் ரவிச்சந்திரன் பங்கேற்றார். (அ-03)




# தாமரை கோபுரத்தை பார்வையிட போலி அனுமதிச்சீட்டு விநியோகம்

கொழும்பு, செப். 15

தாமரை கோபுரம் நாளை முதல் மக்கள் பாவனைக்கு கையளிக்கப்படவுள்ள நிலையில், அதனை பார்வையிடுவதற்கான போலி அனுமதிச் சீட்டு மக்கள் மத்தியில் விநியோகிக்கப்படுவது தொடர்பில் சீனத் தூதரகம் விளக்கமொன்றை வழங்கியுள்ளது.

சீன தூதரகம் ருவிட்டர் பதிவொன்றில் இதனை தெரிவித்துள்ளது.

சமூக வலைத்தளங்கள் வாயிலாக விநியோகிக்கப்பட்டு வரும் குறித்த அனுமதிச்சீட்டு போலியானது என்பதோடு, அதனை விநியோகித்து தாமரை கோபுரத்திற்கு இலவச விளம்பரத்தை ஏற்படுத்திக் கொடுத்த தரப்புக்கு நன்றிகளை தெரிவித்துக்கொள்வதாகவும் சீனத் தூதரகம் அறிவித்துள்ளது.

எவ்வாறாயினும் இன்று முதல் நாட்டு மக்கள் அனைவரும் தாமரை கோபுரத்தை தரைத்தளத்தில் அனுமதிச் சீட்டினை பெற்றுக்கொண்டு பார்த்து மகிழுமாறும் சீன தூதரகம் தெரிவித்துள்ளது. (அ)

### சட்டவிரோதமாக வெளிநாடு செல்ல முற்பட்ட 8 பேர் கைது

கொழும்பு, செப். 15

சட்டவிரோதமாக வெளிநாடு செல்ல முயற்சித்த 08 பேர் தலைமன்னார், பேசாலை பகுதியில் கைது செய்யப்பட் டுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு முன்னெடுக்கப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போது சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டதாக இலங்கைக் கடற்படை அறிவித்துள்ளது.

18 வயதுக்கு மேற்பட்ட 3 இளைஞர்களும் 2 பெண்களும் 18 வயதுக்கும் குறைந்த 3 சிறுவர்களுமே கடற்படையின ரால் கைது செய்யப்பட்டுள் ளனர்.

மொறவெவ, வவுனியா, யாழ்ப்பாணம், பருத்தித்துறை ஆகிய பகுதிகளை சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக இலங்கை க் கடற்படை தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்டவர்களை மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக, பேசாலை பொலிஸாரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ)

# பாலியல் துஷ்பிரயோகம் செய்த பிக்குவுக்கு விளக்கமறியலில்!

அம்பாறை, செப். 15

இளம் பிக்குகளை பாலியல் துஷ்பிரயோகம் செய்த பௌத்த மதகுருவை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கல்முனை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம் கல்முனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட விகாரை ஒன்றில் வைத்து 3 இளம் பிக்குகள் பாலியல் துஷ்பிரயோகம் செய்தமை தொடர்பில் நேற்று முன்தினம் கல்முனை நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்ட நிலையில் சந்தேகநபரான பௌத்த மதகுருவை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கல்முனை நீதிமன்ற நீதிவான் எம்.எஸ்.எம் சம்சுதீன் உத்தரவிட்டார்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் 3 இளம் பிக்குகளை கல்முனை பகுதி விஹாரை ஒன்றில் வைத்து பாலியல் துஷ்பிரயோகம் செய்த பௌத்த மதகுருவை கைது செய்ய பொலிஸாரினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. (அ)

# கோழி இறைச்சி விலை மீண்டும் அதிகரிப்பு!

கொழும்பு, செப். 15

கோழி இறைச்சியின் விலை மீண்டும் அதிகரிக்கப்பட்டது.

இன்று முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இந்த விலை அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்படி, ஒரு கிலோகிராம் கோழி இறைச்சியின் சில்லறை விலை 50 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக வர்த்தகர் சங்கங்கள் தெரிவிக்கின்றன.

அந்த வகையில் ஒரு கிலோகிராம் கோழி இறைச்சியின் புதிய விலை 1,450 ரூபாவாகும்.

எனினும் சந்தையில் கோழி இறைச்சியின் விலை 1,700 ரூபாவை தாண்டியுள்ளதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (அ)

# நாமல் உட்பட அறுவருக்கு எதிரான பண மோசடி வழக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, செப். 15

முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட அறுவருக்கு எதிரான பணமோசடி சட்டத்தின் கீழ் தொடரப்பட்ட வழக்கு, கொழும்பு மேல் நீதிமன்றத்தால் நேற்று புதன்கிழமை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மேல் நீதிமன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்க இந்த வழக்கை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 8ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்வதாக அறிவித்தார்.

வழக்கின் சாட்சிகள் அடுத்த விசாரணை திகதியில் நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டுமெனவும் அவர் அறிவுறுத்தினார்.

கோவர்ஸ் கார்ப்பரேட் சர்வீசஸ் லிமிட்டெட் ஊடாக 30 மில்லியன் ரூபாய் பண மோசடியில் ஈடுபட்டதாக குற்றம்சாட்டப்பட்ட நாமல் உள்ளிட்ட ஆறு பேருக்கு எதிராக சட்டமா அதிபர் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## தேசிய சபையை அமைப்பது குறித்து 20ஆம் திகதி பாராளுமன்றில் விவாதம்

கொழும்பு, செப். 15

தேசிய சபையை அமைப்பதற்கான தீர்மானத்தின் மீதான விவாதத்தை செப்டம்பர் 20ஆம் திகதி பாராளுமன்றத்தில் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று புதன்கிழமை காலை கட்சித் தலைவர்கள் கூட்டம் இடம்பெற்றது.

இதன்போதே, தேசிய சபையை அமைப்பது குறித்து செப்ரெம்பர் 20ஆம் திகதி விவாதம் நடத்த கட்சித் தலைவர்கள் ஒப்புக்கொண்டுள்ளதாக பாராளுமன்றத்தின் தகவல் தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

# வன்முறைகளின் உலைக்களமாக பக்தாத்! மத குரோதங்களின் போர்க்களமாக ஈராக்!

ஐங்கரன் விக்கினேஸ்வரா

ஒரு காலத்தில் அரபு உலகின் மிக முன்னேற்றம் கண்ட நாடாகவிருந்த ஈராக் இன்று வன்முறை களினால் அழிக்கப்பட்டு சிறு துண்டுகளாக உடையக் கூடிய அபாயமுள்ள உள்நாட்டு யுத்தத்திற்கு முகம் கொடுத்துள்ளது. 2003 இல் அமெரிக்க ஆக்கிரமிப்புடன் தொடங்கிய யுத்தம், ஈராக் மக்கள் சதாம் ஹூசைனிடம் இருந்து விடுதலை பெற்று பதினைந்து வருடங்களுக்கும் மேல் ஆகிவிட்டது.

கடந்த இரு வாரங்களாக பாக்தாத்தில் உள்ள அதிபர் மாளிகையை அல்-சதர் ஆதரவு போராட்டக்காரர்கள் முற்றுகையிட்டு பாதுகாப்பு படை யினருக்கும் இடையில் மோதலில் பலர் கொல்லப்பட்டனர். இதையடுத்து அல்-சதர் ஆதரவாளர்களுக்கும், ஈராக் பாதுகாப்புப் படையினருக்கும் இடையே பயங்கர மோதல் வெடித்தது.

இதேபோல் பாக்தாத் முழுவதும் அல்-சதார் ஆதரவாளர்களுக்கும், பாதுகாப்பு படையினருக்கும் இடையில் நடந்த சண்டைகளால் அந்த நகரமே கலவர பூமியானது.

இக்கோர யுத்த களத்தை கண்ட ஈராக், உலகில் தோன்றிய நாகரிகங்களில் முதலாவது நாகரிகமாக கருதப்படும் சுமேரியா ஆகும். சுமேரியா தெற்கு மெசொப்பொத்தேமியாவில் (இன்றைய ஈராக்) அமைந்திருந்த ஒரு பழைய நாகரிகமாகும். கி.மு 4000 முதல் கி.மு. 3000 வரை இந்த நாகரிகம் எழுச்சியுடன் காணப்பட்டதாக வரலாற்றுச் சான்றுகள் கூறுகின்றன.

**சுமேரியா நாகரிகமான ஈராக்**

முதன் முதலில் கருத்து வடிவான எழுத்து முறையை உலகுக்கு அளித்த பெருமை சுமேரியர்களைச் சாரும்.

சுழலும் சக்கரத்தைக் கண்டறிந்து, வணிகப் பத்திரங்களை அமைத்தனர். மேலும்,செம்மைப்படுத்தப்பட்ட எழுத்து முறையையும், நூல் நிலையங்களையும் உருவாக்கினர். காலத்தை 60 நொடிகளாகப் பிரித்ததும் இன்றைய ஈராக்கியர்களான சுமேரியர்களே.

சுமேரியா, மெசபடோமியா, பாபிலோனியா என்றெல்லாம் அறியப்பட்ட இந்நாடு யூப்ரட்டீஸ், டைக்ரிஸ் என்ற இரண்டு பெரு நதிகளுக்கு நடுவே அமைந்துள்ள இன்றைய ஈராக் ஆகும்.

இத்தகைய நாகரீக வளர்ச்சி கண்ட ஈராக்கில், கடந்த வார வன்முறையில் பலியானோர் எண்ணிக்கை 30 ஆக அதிகரித்துள்ளது. 300இற்கும் அதிகமானோர் படுகாயம் அடைந்தனர். வன்முறையை கட்டுப்படுத்தும் விதமாக இடைக்கால பிரதமர் முஸ்தபா அல் கதாமி நாடு தழுவிய ஊரடங்கை அமல் படுத்தினார்.



**ஷியா தலைவர் அல்-சதர் படை**

ஈராக் அரசியலில் ஷியா தலைவர் அல்-சதர் என்பவர் அமெரிக்க-எதிர்ப்பு போராளிகளை வழிநடத்தியவர் மற்றும் லட்சக்கணக்கான ஆதரவாளர்களைக் கொண்ட செல்வாக்குமிக்க தலைவராக திகழ்கிறார். கடந்த ஆண்டு அக்டோபரில் நடைபெற்ற தேர்தலில் அவரது கட்சி 73 இடங்களை வென்ற நிலையில், ஈரான் ஆதரவு ஒருங்கிணைப்புடன் ஈராக்கில் புதிய அரசாங்கத்தை அமைக்க அல் சதர் எதிர்ப்பு தெரிவித்தார்.

இதற்கிடையே, முக்தாதா அல்-சதர், தான் அரசியலில் இருந்து விலகுவதாக இரு வாரத்திற்கு முன் அறிவித்தார். இதனால் அதிருப்தி அடைந்த அவரது ஆதரவாளர்கள் தலைநகர் பாக்தாத்தில் பெரும் வன்முறையில் ஈடுபட்டனர்.

ஷியா மதகுரு மோக்தாடா அல் சதர் இயக்கம், லெபனிய ஹெஸ் பொல்லா இயக்கத்திற்கு ஈராக்கில் ஆதரவாய் உள்ளது.

**அமெரிக்க ஆக்கிரமிப்பும் பிளவுகளான ஈராக்கும்**

ஈராக் 2003 இல் அமெரிக்காவின் ஆக்கிரமிப்புக்கு உட்பட்டு உயிர்களையும் குருதியையும் வீதிகளில் ஓடவிட்டு பல வருடங்கள் முடிந்து விட்டது. இரண்டு முக்கிய காரணங்களுக்காகவே அமெரிக்கா ஈராக் மீது படை யெடுத்திருந்ததாக அன்றைய காலத்தில் அறியப்பட்டது. இராக்கின் பரந்து பட்ட எண்ணெய் வளங்களை அமெரிக்க கம்பனிகள் பெறுவதும், இஸ்ரேலின் இரண்டு பிரதான எதிரிகளில் ஒன்றை அழிப்பதும் ஆகும். (ஈரான் இரண்டாவது எதிரியாகும்)

போரின் முடிவில் முதலாவது இலக்கு நிறைவேற்றப்ப ட்டுக்கலாம். அன்றைய அமெரிக்காவின் ஜனாதிபதி புஷ்ஷின் வார்த்தைகளில்




கூறப்போனால் "மிஷன் நிறைவு பெற்று விட்டது". தன் நாட்டு மக்களுக்கு புஷ் இவ்வாறுதான் அறிவித்திருந்தார். ஈராக் போரில் தாம் வெற்றி பெற்றுவிட்ட தாக அமெரிக்க மக்களுக்கு கூறியிருந்தார்.

ஆனாலும் அதன்பின் நிகழ்ந்த வலுஜா தோல்விகளும், ஷியா சுனி போர்களும், ஐஎஸ் கொடூரங்களையும் உலகம் கண்டது.

**சதாம் ஹூசைன் ஆட்சி கவிழ்ப்பு**

2003 ல் அமெரிக்கத் தலைமையிலான படையெடுப்பு சதாம் ஹூசைன் ஆட்சியை கவிழ்த்தபின்னர், ஈராக் குடியரசில் ஒரு பாராளுமன்ற ஜனநாயகம் படிப்படியாக அறிமுகப்படுத்தப்பட்டது. ஆயினும் பாராளுமன்றத்திற்கான தேர்தல்கள் பொதுவாக சுதந்திரம் இன்றியும், நேர்மையற்றும் நடந்தன.

1920 களில் ஈராக் அரசை உருவாக்கியதில் இருந்து, அதன் அரசியல் மேற்தட்டுக்களில் சுனி சிறுபான்மையினரே



பெருமளவில் தலைமைத்துவத்தில் ஈர்க்கப்பட்டனர்.

2003 அமெரிக்கத் தலைமையிலான ஆக்கிரமிப்பின் பெரும் வரலாற்று மாற்றமாக ஷியா பெரும்பான்மையினர் முதல் முறையாக அதிகாரத்தை ஏற்பதற்கு உதவியது. ஆனால் வெளிநாட்டு ஆக்கிரமிப்பால் மீளவும் ஒரு கடுமையான சுனி கிளர்ச்சிக்கு வழிவகுத்தது. 2004 -2006 ஆண்டுகளில் அமெரிக்க துருப்புக்கள் மற்றும் புதிய ஷியா மேலாதிக்கம் கொண்ட அரசாங்கத்தை இலக்காகக் கொண்டு சுனி கிளர்ச்சிவாதிகளால் மிகவும் தீவிரமான போர் நடந்தது.

**தற்போதைய பாகதாத் நிலைமை**

தலைநகர் பாக்தாத்தில் உள்ள மத்திய அரசாங்கம் தற்போது ஷியா பெரும்பான்மையினரால், மொத்த சனத்தொகையில் 60 வீதம் ஆதிக்கம் செலுத்துகிறது. சதாம் ஹூசைனின் ஆட்சியின் போது முதுகெலும்பாக இருந்த பல சுனி அரேபியர்கள் - ஓரங்கட்டப்பட்டனர்.

ஈராக்கின் குர்திஷ் சிறுபான்மையினர், நாட்டின் வடக்கில் வலுவான தன்னாட்சி உரிமையை கொண்டுள்ளனர். சதாம் ஹூசைனுக்குப் பின்னர் பெரும்பாலான குர்திஸ் ஒரு கூட்டாட்சி அரசை பரிந்துரைத்தனர். அதன் சொந்த அரசாங்கம் மற்றும் பாதுகாப்புப் படைகளை குர்துகள் கொண்டிருந்தாலும், எண்ணெய் வர்த்தகத்தில் மத்திய அரசாங்கத்துடன் எப்போதும் முரண்படுகின்றனர்.

**அமெரிக்க துருப்புக்கள் வெளியேற்றம்**

நீண்டகால போரிலிருந்து டிசம்பர் 2011 ல் ஈராக்கிலிருந்து அமெரிக்க துருப்புக்கள் வெளியேறின. அதன்பின் முழு அரசு இறையாண்மையையும் மீண்டும் ஈராக் ஷியா அதிகாரிகள் கைப்பற்றினர். அமெரிக்க துருப்புக்கள் வெளியேறியதன் பின் ஈராக் மத்திய கிழக்கில் மிகவும் அரசியல் உறுதியற்ற நாடாக உருவாகியமைக்கு முக்கிய காரணம் அதிகாரத்தின் ஆழ்ந்த பிளவுகளும், இன, மத குழுக்களுக்கும், இடையிலான முரண்பாடுகள் நீண்டு வந்ததே.

அமெரிக்க ஆதரவுடன் ஈராக்கின் அரசியல் அமைப்பின் சில முக்கிய மாற்றங்கள் 2004இல் உருவாகின. குறிப்பாக குர்திஸ்தான் பிராந்திய அரசு உருவாக்கப்பட்டது. குர்திஷ் தலைவர்கள் பாக்தாத்தில் உள்ள மத்திய அரச நிறுவனங்களில் பதவி பெற்றாலும் குர்திஸ் மக்கள் வடக்கில் தங்கள் தன்னாட்சி அரசை நிறுவினார்கள். அத்துடன் குர்திஷ் சிறுபான்மையினருக்கு சிறப்பு உரிமைகளை உறுதிப்படுத்தப்பட்டது.

ஈராக் வடக்கு பகுதியில் உள்ள குர்திஷ் பிராந்தியங்களில் தமது சொந்த அரசாங்கம், பாராளுமன்றம் மற்றும் பாதுகாப்புப் படைகளுடன் ஒரு உயர்ந்த தன்னாட்சி உரிமையை உருவாக்கினர்.

குர்திஷ் கட்டுப்பாட்டு பிரதேசங்கள் எண்ணெய் வளம் நிறைந்தவை. எண்ணெய் ஏற்றுமதியில் இருந்து இலாபம் ஈட்டுவது என்பது குர்திஷ்க்கும் பாக்தாத்தில் மத்திய அரசாங்கத்திற்கும் இடையிலான உறவுகளில் ஒரு பெரும் பிணக்குகளையும் தோற்றுவித்தது.

(09ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கை தமிழர் பிரச்னை:
# இந்தியாவின் ஐ.நா. நிலைப்பாட்டில் திடீர் மாற்றத்துக்கு என்ன காரணம்?

இனப் பிரச்னைக்கு உரிய வகையில் அரசியல் தீர்வை வழங்குவதில் இலங்கை அரசாங்கம் கொண்டிருக்கும் கடப்பாட்டை நிறைவேற்றுவதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை எட்டவில்லை என ஐநா சபையில் இந்தியா கவலை வெளியிட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பேரவையின் 51வது கூட்டத் தொடர் ஜெனீவாவில் நடைபெற்று வரும் நிலையிலேயே, இந்தியா இதனைக் குறிப்பிட்டுள்ளது.

**இந்தியாவில் நிலைப்பாட்டில் திடீர் மாற்றம்**

அரசியலமைப்பின் 13வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தல், மாகாண சபைகளுக்கான அதிகாரப் பகிர்வு மற்றும் மாகாண சபைத் தேர்தலை விரைவில் நடத்துதல் ஆகியவற்றின் ஊடாக இனப் பிரச்னைக்கு உரிய வகையில் அரசியல் தீர்வை வழங்குவதில் இலங்கை அரசாங்கம் கொண்டிருக்கும் கடப்பாட்டை நிறைவேற்றுவதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை எட்டவில்லை என இந்தியா அந்த கூட்டத்தொடரில் தெரிவித்துள்ளது.

மாகாண சபைகளுக்கான அதிகாரப்பகிர்வு உள்ளடங்கலாக அரசியலமைப்பின் 13வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துதல் மற்றும் மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்த வேண்டும் எனவும் இந்தியா கூறுகின்றது.

இதன்படி, அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தல், மாகாண சபைகளுக்கான அதிகாரப்பகிர்வு மற்றும் மாகாண சபைத் தேர்தல்களை விரைவாக நடாத்துதல் ஆகியவற்றின் ஊடாக இனப்பிரச்னைக்கு உரியவாறான அரசியல் தீர்வை வழங்குவதில் இலங்கை அரசாங்கம் கொண்டிருக்கும் கடப்பாட்டைப் பூர்த்தி செய்வதில் குறிப்பிடத்தக்க அளவிற்கு முன்னேற்றகரமான நடவடிக்கைகள் எவையும் மேற்கொள்ளப்படாமை தொடர்பில் இந்தியா சார்பில் உரையாற்றிய பிரதிநிதி கரிசனத்தை வெளிப்படுத்தினார்.

மேலும் ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் மக்களுக்கான நீதி, சமாதானம், சமத்துவம் மற்றும் சுயகௌரவம் ஆகியவற்றை உறுதிசெய்யக்கூடிய வாறான அரசியல் தீர்வை வழங்குவதே இலங்கையின் சமாதானம் மற்றும் நல்லிணக்கம் தொடர்பில் இந்தியாவின் நிலைப்பாடாக இருந்து வருகிறது என குறிப்பிட்ட அவர், தற்போது இலங்கை முகங்கொடுத்திருக்கும் நெருக்கடியானது கடன்களை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் பொருளாதாரத்தின் மட்டுப்பாடுகள் மற்றும் அதனால் மக்களின் வாழ்க்கைத் தரம் மீது ஏற்படக்கூடிய தாக்கங்கள் என்பவற்றைத் தெளிவாகப் புலப்படுத்தியுள்ளது என்றும் சுட்டிக்காட்டினார்.

மாகாண சபைகளுக்கான அதிகாரப் பகிர்வு உள்ளடங்கலாக அரசியலமைப்பின் 13வது திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படுவதுடன் மாகாண சபைத் தேர்தல்கள் விரைவாக நடாத்தப்பட வேண்டுமெனக் குறிப்பிட்ட இந்தியப் பிரதிநிதி, அதன்மூலம் அனைத்து இலங்கையர்களாலும் சுபிட்சமான எதிர்காலத்தை முன்னிறுத்திய தமது அபிலாஷைகளை நிறைவேற்றிக்கொள்ள முடியும் என்றும், எனவே இவ்விடயத்தில் இலங்கை உடனடியானதும் நம்பகத்தன்மை வாய்ந்ததுமான நடவடிக்கையை முன்னெடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

**இந்தியாவின் கருத்து இலங்கையில் தாக்கத்தை ஏற்படுத்துமா?**

சென்னை பல்கலைக்கழகத்தின் அரசியல் அறிவியல் துறையின் முன்னாள் தலைவர் பேராசிரியர் ராமு மணிவண்ணன் இதுதொடர்பாக பேசுகையில், "ராஜதந்திர அழுத்தம் காரணமாகத்தான் இந்திய



**ராஜதந்திர அரசியலில் இந்தியாவைவிட பலமடங்கு முன்னோடி நாடாக இலங்கை இருக்கிறது. தேவைப்படும்போது இந்தியாவை புறக்கணிப்பதும் மற்ற தருணங்களில் மிக மிக நெருக்கமாக இருப்பதும் இலங்கைக்கு கடினமான ஒன்று அல்ல**

***- பேராசிரியர் ராமு மணிவண்ணன்***

பிரதிநிதி இவ்வாறு ஐநா மனித உரிமைகள் ஆணையத்தில் தெரிவித்திருக்க வேண்டும். உண்மையில் இலங்கை தமிழர்கள் வாழ்வில் மாற்றத்தைக் கொண்டு வர வேண்டும் என இந்தியா நினைத்திருந்தால்



அதனை எப்போதோ கொண்டு வந்திருக்கலாம். அப்படி பல வாய்ப்புகள் இருந்தும் அதனை இந்தியா செய்யவில்லை." என்றார்.

"இப்போது இலங்கை தன் கட்டுப்பாட்டை மீறியோ அல்லது தங்கள் கட்டுப்பாட்டுக்குள் இல்லை என்பதால் இந்தியா ஒரு அழுத்தத்தை விளைவிக்க இவ்வாறு கூறியிருக்கலாம். இலங்கை மீதான பல குற்றச்சாட்டுகளை கடந்து அந்த நாட்டுக்கு தொடர்ந்து ஆதரவளித்து வந்த இந்தியா, இவ்வாறு கூறுவது மிகப் பெரிய அளவில் கவனத்தை ஈர்ப்பதாக உள்ளது."

"2009-ல் இருந்து ஐநா மனித உரிமைகள் ஆணையத்தில் இலங்கை தொடர்பாக கொண்டு வரப்பட்ட அனைத்து தீர்மானங்களிலும் இலங்கைக்கு ஆதரவாகத்தான் இந்தியா செயல்பட்டு வருகிறது. இலங்கைக்கு ராஜதந்திர ரீதியாக நெருக்கடியான நிலையை இந்தியா கொடுக்கக்கூடும் என்பதைவிட, அப்படி நெருக்கடியை கொடுக்கும் நாடு இந்தியா அல்ல. எங்களால் அழுத்தம் தர முடியும் என்று காண்பிக்கக் கூடிய நாடுதான் இந்தியாவே தவிர, உண்மையில் அத்தகைய அழுத்தத்தை இந்தியாவால் ஏற்படுத்த முடியாது. இலங்கைக்கு ராஜதந்திர ரீதியாக ஒரு செய்கையை காண்பிக்கிறார்கள், அவ்வளவுதான். இலங்கை பொருளாதார நெருக்கடியில் சிக்கியபோது மற்ற நாடுகளைவிட இந்தியாதான் அதிகமாக உதவி செய்தது. அப்படி இருக்கையில் எப்படி ஐநா மனித உரிமைகள் ஆணையத்தில் இந்தியா இலங்கைக்கு எதிராக செயல்பட முடியும்?" என்றார் ராமு மணிவண்ணன்.

இந்தியாவின் இந்த நிலைப்பாடு இலங்கையில் எவ்வித தாக்கத்தை ஏற்படுத்தும் என்ற கேள்விக்கு பதிலளித்த அவர், "இலங்கையை பொறுத்தவரை இந்தியாவின் ராஜதந்திரம் என்பது "வட இந்திய" அரசியல்தான். இதில் எந்தவித மாற்றுக்கருத்தும் இல்லை. இந்தியா இலங்கைக்கு நட்பு நாடு. ஆனால், தமிழகமோ அல்லது தென்னிந்திய அரசியலில் இருந்து பார்க்கும்போது அது உண்மை கிடையாது. இலங்கை ஏறக்குறைய முழுமையாக சீனாவுக்கு ஆதரவான நிலைப்பாட்டுக்கு செல்லும்போது இந்தியப் பெருங்கடலில் புவிசார் மாற்றங்கள் நிகழும்போது இந்திய அரசாங்கத்தின் பார்வையில் ஒரு மாற்றத்தை அவதானிக்க வேண்டிய கட்டாயம் உள்ளது. அதனை ஒரு முழுமையான கட்டாயமாக இந்தியா எதிர்பார்க்கவில்லை. ராஜதந்திர அரசியலில் இந்தியாவைவிட பலமடங்கு முன்னோடி நாடாக இலங்கை இருக்கிறது. தேவைப்படும்போது இந்தியாவை புறக்கணிப்பதும் மற்ற தருணங்களில் மிக மிக நெருக்கமாக இருப்பதும் இலங்கைக்கு கடினமான ஒன்று அல்ல" என அவர் தெரிவித்தார்.

---

# வன்முறைகளின் உலைக்களமாக...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

**பாக்தாதில் கூட்டணி அரசாங்கம் :**

சதாம் ஆட்சிக் கவிழ்ப்பின் பின் 2005ல் நடந்த முதல் தேர்தலிலிருந்து, எந்தவொரு கட்சியும் தனது சொந்த அரசாங்கத்தை அமைப்பதற்கான ஒரு வலுவான பெரும்பான்மையை உருவாக்க முடியவில்லை. இதன் விளைவாக, ஷியாக்கள், சுனி மற்றும் குர்துகள் உட்பட பல கட்சிகளின் கூட்டணியால் ஈராக்கில் அரசியல் ஆட்சி ஏற்பட்டது.

பல கட்சிகளின் கூட்டணி ஆட்சியின் விளைவால் தொடர்ந்தும் இன மோதல்களும் , அரசியல் உறுதியற்ற தன்மையையும் விளைவித்தது.

18 மாகாணங்களாக பிரிக்கப்பட்ட ஈராக்கில், ஒவ்வொன்றும் அதன் சொந்த கவர்னர் தலைமையில் மாகாண சபை ஆட்சியில் உள்ளது. எண்ணெய் வளம் கொண்ட ஷியா பிராந்தியங்களில் கூட்டாட்சி உள்ளது.

பாக்தாத்தில் ஷியா ஆதிக்க அரசாங்கத்தை நம்பாத சுன்னி மாகாணங்கள் தனித்தே இயங்குகின்றன என்பதும் உண்மையே.

பிரிட்டிஷ் மேற்பார்வையின் கீழ் இருந்த ஈராக்கில் 1958 ல் முடியாட்சி கவிழ்க்கப்பட்டது. இராணுவ ஆட்சிக் கவிழ்ப்பு மூலம் சுனிகளின் பாத் கட்சி சர்வாதிகார அரசாங்கத்தினை ஏற்படுத்தியது. அதுவே ஈராக் ஆட்சியில் சதாம் ஹூசேனின் சகாப்தம் நீண்ட காலமாக தொடர்ந்து வந்தது. 2003 ல் அமெரிக்கத் தலைமையிலான படையெடுப்பால் சதாம் ஹூசைன் ஆட்சி கவிழ்ந்தது.

சுனிக்களின் பாத் கட்சி ஆட்சி அகற்றப்பட்ட பின் இன்றைய ஈராக்கின் கூட்டணி அரசாங்க முறை மிகவும் பன்முகத்தன்மையும் திறமையும் உடையதாக உருவாகும் என எதிர்பார்க்கப்பட்டது. மாறாக போட்டி அரசியல் குழுக்களுக்கிடையே பரஸ்பர நம்பிக்கையற்ற தன்மையால் அந்த நம்பிக்கையும் முடங்கியது.

ஊழல் பிரதமர் நூரி அல் மாலிக்

சதாம் ஆட்சியின் பின்னர் முதல் தேர்வு செய்யப்பட்ட சக்தி வாய்ந்த அரசியல்வாதியாக 2006 ல் பிரதம மந்திரி நூரி அல்-மாலிக் தேர்வானார். உள்நாட்டு யுத்தத்தின் பின்னரான ஊழல் ஆட்சியை நடாத்தியதாகநூரி மாலிக் குற்றம் சாட்டப்பட்டார்.

2006 இல் ஈராக்கில் சர்வாதிகார ஆட்சி அதிகாரத்தை அமெரிக்க உதவியுடன் ஏகபோகம் செய்தார் என்றும், பாதுகாப்புப் படைகளில் தனிப்பட்ட விசுவாசிகளை நிறுவினார் என்றும் குற்றம் சாட்டப்பட்டார்.


அத்துடன் அவரது வாரிசுகளின் கீழ் ஆட்சி தொடரலாம் எனவும் சர்வதேச பார்வையாளர்கள் அஞ்சினர்.

தற்போது நூரி அல்-மாலிக் ஆட்சியில் இருந்து அகற்றப்பட்டாலும், கடந்த தேர்தலிலும் எந்தவொரு கட்சியும் தனது சொந்த அரசாங்கத்தை அமைப்பதற்கான ஒரு வலுவான பெரும்பான்மையை உருவாக்க முடியவில்லை. இதன் விளைவாக, தொடர்ந்தும் இன மோதல்களும் , அரசியல் உறுதியற்ற தன்மையையும் தொடர்கிறது. ஈராக்கில் தற்போதைய சூழ்நிலைகளால் மத மற்றும் இன வேறுபாடுகளால் பொருளாதார அபிவிருத்தி இன்றி நிதி நெருக்கடியால் திணறுகின்றது.


மிகப்பெரிய வன்முறைகளால் ஊனமுற்றிருக்கும் ஈராக்கிய பொருளாதாரமும் தள்ளாடுகின்றது. அத்துடன் பல ஈராக்கியர்கள் உள்நாட்டுப் போர் மீண்டும் எழலாம் எனும் அச்சத்தில் உள்ளனர்.

# புலமைச் சிகரம் தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

**18)** 
i) இத் திண்ம உருவில் எத்தனை முகங்கள் உள்ளன? ................................

ii) இத் திண்ம உருவில் எத்தனை உச்சிகள் உள்ளன? ................................

**19)**  நிறந் தீட்டப்பட்ட பகுதியைப் பின்னமாக எழுதுக.

..........................................

**20)** தரப்பட்ட எண் கோலங்களில் அடுத்துவரும் எண்ணை எழுதுக.

i) 122 , 124 , 126 , .............. , ............ ii) 18 , 15 , 12 , .............. , ............

**21)**

| | | |
|---|---|---|
| 3, | 9, | 14, |
| | 6, | |
| 10, | | 12, |

பெட்டிக்குள் உள்ள எண்களில் மூன்றின் மடங்குகளைத் தெரிவு செய்து ஒழுங்கு முறையில் எழுதுக.

.........................................................................

**22)** ஒரு பழக்கூடையில் 620 அப்பிள் பழங்களும் 125 மாம்பழங்களும் உண்டு. கூடையில் உள்ள மொத்தப் பழங்களின் எண்ணிக்கையை எழுதுக.

.........................................................................................

**23)** ஒரு கிளையில் 480 பூக்கள் மலர்ந்திருந்தன. அவற்றில் 25 பூக்களைப் பறித்தெடுத்தால் கிளையில் எஞ்சியிருக்கும் பூக்களின் எண்ணிக்கை யாது?

..................................................................

**24)** பழப்பாகுப் போத்தல் ஒன்றில் 3*l* 300*ml* பானம் அடங்கியுள்ளது. அதனை 3 மாணவர்களிடையே சமமாகப் பகிரப்பட்டதெனின் ஒருவருக்குக் கிடைத்த பான அளவு யாது?

.................................................................

**25)** 500g சீனியின் விலை ரூபா 48.00 எனின் 1500g சீனியின் விலை யாது? ..................................................

**26)** **பின்வரும் சிட்டையைப் பூரணப்படுத்துக.**

| பொருள் | வாங்கிய அளவு | ஒரு கிலோகிராமின் விலை | | பெறுமதி | |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | சதம் | ரூபா | சதம் |
| பருப்பு | 2kg | 95 | 00 i) | ............ | ........ |
| தேயிலை | 500g | 200 | 00 ii) | ............ | ........ |
| | | மொத்தப்பணம் | | ............ | ........ |

**27)** கடிகார முகத்தில் பி.ப. 3.30 மணி காட்டுகின்றது. கடிகாரம் காட்டும் நேரத்தை நியம நேரத்தில் எழுதுக.

......................................................

**28)** 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?

**28)** 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?

......................................................

**29)** ஒரு பூங்கொத்தில் மூன்று பூக்கள் வீதம் 12 பூங்கொத்துக்களில் எத்தனை பூக்கள் உள்ளன?

...................................................... (30 புள்ளிகள்)

❖ **இலக்கம் 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தெ செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

**30)** சூரிய நமஸ்காரத்தின் நான்காம் படிநிலை எது?

1)  2)  3) 

**31)** வடமாகாணத்தில் அமைந்துள்ள குளம்
1) அபயவாவி 2) இரணைமடுக்குளம் 3) பராக்கிரமபாகு சமுத்திரம்

**32)** உள் மூச்சு வாங்குதல் வெளி மூச்சு விடுதல் என்பது மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாட்ட எந்த படிமுறை ஆகும்?
1) திடசித்தம் 2) உதிப்பு 3) உடலைத் தளர்த்தல்

**33)** தேசிய இலச்சினையின் பூவிதழ் வட்டத்தின் மத்தியில் இருப்பது எது?
1) சூரியன் 2) வாளேந்திய சிங்கம் 3) நெற்கதிர்

**34)** பிரித்தானியர்களால் முழுமையாக இலங்கை கைப்பற்றப்பட்ட ஆண்டு எது?
1) 1976 2) 1851 3) 1815

**35)** வருடத்தின் முதல் மாதமும் இறுதி மாதமும் பூக்கும் பூக்கள் எவை?
1) இறப்பர், வேம்பு 2) இறப்பர், தாழம்பூ 3) பிறைப்பூ, நாவல்

## விடைகள்

**18.** 1) 6 2) 8 **19.** $\frac{3}{10}$
**20.** 1) 128, 130 2) 9, 6
**21.** 3, 6, 9, 12
**22.** 745 **23.** 455
**24.** 1l 100ml / 1100ml **25.** ரூபாய் 144.00
**26.** 1) 190 2) 100 3) 290
**27.** 15 : 30 **28.** 5m 50cm / 550cm
**29.** 36 பூக்கள்
**30.** 1 **31.** 2 **32.** 3
**33.** 2 **34.** 3 **35.** 2

## கல்வி tv CHANNEL-1

**15.09.2022**
**வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மாதிரி வினாத்தாள் |
| | மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு-LIVE கணிதம் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| | | மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

## கல்வி tv CHANNEL - 2

**15.09.2022**
**வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |



## கராத்தே சுற்றுப் போட்டிகளில் திருக்கோவில் வலயம் சாதனை!

அம்பாறை, செப். 15

2022ஆம் ஆண்டிற்கான கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான கராத்தே சுற்றுப் போட்டிகளில் திருக்கோவில் கல்வி வலயம் 4 தங்கப்பதக்கம் அடங்கலாக 13 பதக்கங்களை வென்று தொடர்ந்து சாதனை படைத்துள்ளது.

தென்கிழக்கு பல்கலைக்கழக உள்ளக விளையாட்டு அரங்கில் இடம்பெற்ற பாடசாலைகளுக் கிடையிலான கராத்தே சுற்றுப் போட்டியின் திருக்கோவில் கல்வி வலயம் சார்பாக 16 மணவர்கள் பங்குபற்றிய நிலையில் 04 தங்கம் 06 வெள்ளி 03 வெண்கலம் என 13 பெற்று வலயத்திற்கு பெருமை சேர்த்தனர்.

இதில் அக்கரைப்பற்று ஸ்ரீ இராமகிருஸ்ண தேசிய பாடசாலை மாணவர்கள் 02 தங்கம் 04 வெள்ளி 03 வெண்கலப் பதங்கங்களை பெற்றதுடன் அக்கரைப்பற்று ஸ்ரீ இராம கிருஸ்ண மகாவித்தியாலய மாணவர்கள் 02 தங்கப்பதங் கங்களையும் கண்ணகி கிராமம் கண்ணகி வித்தியாலய மாணவர்கள் 02 வெள்ளிப் பதங்கங்களையும் வென்றெடுத்தனர்.

குறித்த மாணவர்கள் யாவரும் கிழக்கிலங்கையில் பிரசித்தி பெற்ற ராம் கராத்தே சங்கத்தில் பயிற்சியை பெற்றவர்கள் என்பதுடன் இவர்களுக்கான பயிற்சியை சிகான். கே.கேந்திரமூர்த்தியின் வழிகாட்டலில் சென்சி கே. ராஜேந்திர பிரசாத், சென்சி கே.சாரங்கன் வழங்கியிருந்தமை குறிப்பிடத்

## கொக்கட்டிச்சோலையில் ஏர்பூட்டு விழா





மட்டக்களப்பு, செப். 15

கிழக்கு மாகாணத்தில் விவசாயத்தை மேற்கொள்வோர் பண்டைய காலம் தொடக்கம் முன்னெடுக்கும் ஏர்பூட்டு விழா, மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

கொக்கட்டிச்சோலை தான்தோறீஸ்வரர் கோவிலின் ஏற்பாட்டில், கொக்கட்டிச் சோலையில் உள்ள வயல் பகுதியில் நேற்றுமுன்தினம் காலை இந்நிகழ்வு நடைபெற்றது.

கொக்கட்டிச்சோலை தான் தோன்றீஸ்வரருக்கு தேர் உற்சவம் நிறைவடைந்ததும் மழை பெய்யும் என்னும் அக்காலப் பகுதியில் விவசாயிகள் தங்களது வயல் நிலங்களில் விதைப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பதும் காலம் காலமாக நடைபெற்று வருகின்றது.

இக்காலப்பகுதியில் கொக்கட்டிச்சோலையில் ஏர்பூட்டப்பட்டதை தொடர்ந்து கிழக்கு மாகாணத்தில் விவசாயிகள் தமது நெற்செய்கையை ஆரம்பிப்பர்.

இவ்வாறான நடைமுறைகள் யுத்த காலத்தில் இல்லாமல்போயிருந்த நிலையில், மீண்டும் இந்த பண்டைய நடைமுறை கொண்டுவரப்பட்டு, அது தொடர்பான நிகழ்வுகள், கொக்கட்டிச் சோலை தான்தோறீஸ்வரர் கோவிலின் ஏற்பாட்டில் நடைபெற்று வருகின்றன.

தான்தோறீஸ்வரர் கோவிலின் பிரதமகுரு சிவஸ்ரீ மு.கு.சச்சிதானந்த குருக்களின் தலைமையில், விசேட பூஜைகள் நடைபெற்று, ஏர்பூட்டு உழும் நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கோவில் நிர்வாக சபையினர், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் உட்பட விவசாயிகள் பலரும் கலந்து கொண்டனர்.

எமது பாரம்பரியங்கள் தொடர்ந்து பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காக எருதைக்கொண்டு இந்த ஏர்பூட்டும் நிகழ்வை நடத்துவதாக இங்கு கருத்து தெரிவித்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார். (அ)

## கலைமன்றங்களை பதிவு செய்ய ஏற்பாடு

திருமலை, செப். 15

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் கலை மன்றங்களை 2023, 2024, 2025ஆம் வருடங்களுக்கு புதிதாக பதிவு செய்தல் மற்றும் புதுப்பித்தல் செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக, கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாண பணிப்பாளர் திருமதி சரண்யா சுதர்சன் அறிவித்துள்ளார்.

கலை மன்றங்களை பதிவு செய்வதற்காக பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் 2017ஆம் காலப்பகுதியில் உருவாக்கப்பட்ட "கலை மன்றங்களை பதிவு செய்வதற்கான விதிமுறைகள்" என்பவற்றுக்கு அமைய வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்ப படிவத்தை இம் மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் அந்தந்த பிரதேச செயலக காலாசார உத்தியோகத்தர்கள் மற்றும் மாவட்டக் கலாசார உத்தியோகத்தர்களுக்கு அனுப்பி வைத்தல் வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

கலாசார உத்தியோகத்தர்கள், வெளிக்கள வேலைகளில் கலைமன்றங்களை மேற்பார்வை செய்தல், கலை மன்ற உறுப்பினர்களுடனான கலந்துரையாடல் என்பன முன்கூட்டியே தங்களது நிகழ்ச்சி திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)



## விவசாய அமைச்சரை சந்தித்த வியாழேந்திரன்

மட்டக்களப்பு, செப். 15

மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகளின் நலன்கருதி வர்த்தக வாணிப இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் விவசாய அமைச்சர் மகிந்த அமரவீரவை நேற்று முன்தினம் விவசாய அமைச்சில் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகள் எதிர்நோக்கும் முக்கிய பிரச்னைகளில் ஒன்றாக காணப்படும் உரப்பிரச்னை தொடர்பாக விவசாய அமைச்சரை தெளிவுபடுத்தியதுடன் மாவட்ட விவசாயிகளுக்கு சுமார் எட்டாயிரம் மெற்றிக் தொன் யூரியா மற்றும் சுமார் நான்காயிரத்து ஐந்நூறு மெற்றிக் தொன் குடலப் பசளை தேவைப்பாடாகவுள்ளமை தொடர்பாகவும் அமைச்சரை தெளிவுபடுத்தினார்.

அத்துடன் விவசாயிகளுக்குரிய எரிபொருள் விடயத்தில் முன்னுரிமை வழங்குவது சம்பந்தமாகவும் கலந்துரையாடியுள்ள இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் எதிர்வரும் நாட்களில் விவசாய அமைச்சரை மட்டக்களப்புக்கு வருகை தந்து நேரடியாகக் களவிஜயத்தை மேற்கொண்டு விவசாய அமைப்புக்களுடனான நேரடி கலந்துரையாடலையும் மேற்கொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்தார்.

இந்த வேண்டுகோளுக்கமைய விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர இம்மாத இறுதிக்குள் மட்டக்களப்பிற்கு வருகை தந்து விவசாயிகளுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டு விவசாயிகளின் பிரச்னைகளை தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கையினை முன்னெடுப்பதாக இதன் போது உறுதியளித்தார் என இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் குறித்த அமைச்சருடனான சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு தெரிவித்தார். (அ)



## கரைவலையில் அதிக கீரி மீன்கள்

அம்பாறை, செப். 15

கல்முனை பகுதியில் உள்ள கடற்பரப்பில் கடந்த நாட்களில் ஏற்பட்ட சீரற்ற வானிலை காரணமாக கரைவலை மீன்பிடி மிகவும் பாதிக்கப்பட்டிருந்தது.

எனினும், நேற்றுமுன் தினம் கீரிவகை மீன்கள் அதிகளவில் பிடிக்கப்பட்டமையால் கரைவலை மீனவர்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். இந்த கீரிவகை மீன்கள், உள்ளூர் சந்தையில் கிலோகிராம் ஒன்றுக்கு 600 ரூபாய் 800 ரூபாய்க்கு விற்பனையாகின்றது. (அ)

## போதைப்பொருளுடன் சந்தேக நபர் சிக்கினார்

அம்பாறை, செப். 15

ஹெரோயின் போதைப் பொருளை தம்வசம் வைத்திருந்த சந்தேக நபர் கல்முனை விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டார்.

அம்பாறை மாவட்டம் கல்முனை விசேட அதிரடிப் படை முகாமிற்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவல் ஒன்றினை அடுத்து கடந்த செவ்வாய்க்கிழமை இரவு நிந்தவூர் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கடற்கரை வீதியில் வைத்து விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட தேடுதலில் சந்தேக நபர் கைதானார்.

இவ்வாறு கைதான நபர் நிந்தவூர் 9 பகுதியைச் சேர்ந்த 36 வயது மதிக்கத்தக்கவர் என்பதுடன் சந்தேக நபர் வசம் இருந்து ஹெரோயின் போதைப் பொருள் 3 கிராம் 600 மில்லிகிராம் விசேட அதிரடிப்படையினரால் கைப் பற்றப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்ட நபர்கள் சான்றுப் பொருட்களுடன் நிந்தவூர் பொலிஸாரிடம் விசேட அதிரடிப்படையினர் நீதிமன்ற நடவடிக்கைக்காக பாரப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. (அ)

### உக்ரைன் தீவிர தாக்குதல்

# கிரீமியாவில் இருந்து அவசரமாக வெளியேறும் ரஷ்ய அதிகாரிகள்!

கீவ், செப். 15

உக்ரைனிடம் இருந்து 2014 ஆம் ஆண்டு ரஷ்யா ஆக்கிரமித்த கிரீமியா தீபகற்பத்திலிருந்தும் தெற்கு உக்ரைன் பகுதிகளிலிருந்தும் ரஷ்ய இராணுவ தளபதிகள், உளவுத் துறை அதிகாரிகள், ரஷிய ஆதரவு கிளர்ச்சிப் படையினர் தமது குடும்பங்களுடன் அவசரமாக வெளியேறி வருவதாக உக்ரைன் தெரிவித்தது.

கிரீமியா தீபகற்பத்திலிருந்தும் தெற்கு உக்ரைன் பகுதிகளிலிருந்தும் அவசர அவசரமாக வெளியேறும் ரஷ்ய இராணுவ தளபதிகள், உளவுத் துறை அதிகாரிகள் ரஷ்யாவிலுள்ள தங்களது இல்லங்கள் நோக்கி செல்வதாக உக்ரைன் இராணுவத்தின் உளவுப் பிரிவு நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உக்ரைன் கிழக்கில் ரஷ்யாவால் ஆக்கிரமிக்கப்பட்ட சுமார் 6,000 சதுர கி.மீ. பரப்பளவு பகுதிகளை விடுவித்து உக்ரைன் படைகள் முன்னேறி வருகின்றன. அண்மை நாட்களில் ரஷ்ய ஆக்கிரமிப்பில் இருந்து பல நகரங்களை உக்ரைன் படைகள் கைப்பற்றியுள்ளன.

இவ்வாறு இழந்த பல பகுதிகளை உக்ரைன் வேகமாக மீளக் கைப்பற்றி வரும் நிலையிலேயே ரஷ்ய இராணுவ தளபதிகள், உளவுத் துறை அதிகாரிகள், ரஷ்ய ஆதரவு கிளர்ச்சி படையினர்



தமது குடும்பங்களுடன் அவசரமாக வெளியேறி வருவதாக உக்ரைன் தெரிவித்தது.

கிரீமியா தீபகற்பத்தில் தங்கியிருக்கும் ரஷ்யர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த முயற்சித்த போதிலும் இராணுவத் தளபதிகள், உளவுத்துறை அதிகாரிகள் இரகசியமாக வெளியேற முற்படுகின்றனர். தங்கள் வீடுகளை குறைந்த விலைக்கு விற்கவும் முயற்சிக்கின்றனர் எனவும் உக்ரைன் உளவுத்துறை தெரிவித்துள்ளது.

அத்துடன், கிரீமியா மீது உக்ரைன் தாக்குதல் நடத்தினால் அதனை அனைத்து வழிகளிலும் எதிர்கொள்வதற்கான திட்டங்களையும் ரஷ்யா வகுத்து வருவதாகவும் உளவுத் துறையினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, செப்ரெம்பர் 12 ஆம் திகதி வரை உக்ரைன் படைகள் தெற்கு உக்ரைனில் 12 கிலோமீற்றர்கள் தூரம் முன்னேறி ரஷ்ய கட்டுப்பாட்டில் உள்ள பகுதிக்குள் நுழைந்து 13 குடியேற்றங்களை மீட்டுள்ளனர்.

கடந்த இரண்டு வாரங்களில் அதிகளவு ரஷ்யப் படை யினர் கொல்லப்பட்டதுடன், இரண்டு விமானங்கள் மற்றும் இரண்டு ஹெலிகொப்டர்கள் உக்ரைன் படைகளால் தெற் கில் வீழ்த்தப்பட்டன எனவும் உக்ரைன் தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 2014-ஆம் ஆண் டில் உக்ரைனை ஆட்சி செய்த ஜனாதிபதி விக்டர் யானு கோவிச்சுக்கு எதிராக, மேற்கத் திய ஆதரவாளர்கள் தீவிர போராட்டத்தில் ஈடுபட்ட னர். இதையடுத்து அவரது ஆட்சி கவிழ்ந்தது.

அதனைத் தொடர்ந்து, கிழக்கு உக்ரைனின் டான்பாஸ் பிராந்தியத்தில் அரசுப் படையினருக்கு எதிராக ரஷ்ய ஆதரவு கிளர்ச்சியாளர்கள் சண்டையிட்டு கணிசமான பகுதிகளைக் கைப்பற்றினார். அப்போது ரஷ்யாவும் கிரீமியா பகுதி மீது படையெடுத்து அந்த தீபகற்பத்தை தங்களுடன் இணைத்துக் கொண்டது குறிப்பிடத்தக் கது.(அ)



# நோய்களால் அவதியுற்றுவந்த கலைஞர் கருணைக் கொலை!

பாரிஸ், செப். 15

1950 களில் பிரெஞ்சு சினிமாவில் அடிப்படை மாற்றத்தை உருவாக்க வழிகோலிய 'பிரெஞ்சுப் புதிய அலை' என்ற சினிமாக் கலைத்துறை இயக்கத்தின் தந்தை என வர்ணிக்கப்படுபவரான தயாரிப்பாளர் ஜீன்-லூக் கோடார்ட் தனது 91 ஆவது வயதில் காலமானார். அவரது மரணம் மருத்துவ உதவியுடனான தற்கொலை - அல்லது கருணைக் கொலை என்ற தகவலை அவரது குடும்பத்தின் சட்ட ஆலோசகர் வெளியிட்டிருக்கிறார்.

பல்வேறு செயலிழப்பு நோய்க் குறிகளால் நீண்ட காலம் அவதிப்பட்ட அவர் சுவிற்சர்லாந்தில் தனது வாழ்வை மருத்துவ அனுமதியுடன் நிறைவு செய்து கொண்டார் என்று அறிவிக் கப்பட்டிருக்கிறது.

சுவிற்சர்லாந்தில் கருணைக் கொலை, மருத்துவ உதவியுடனான தற்கொலை என்பன சட்டரீதியாக அனுமதிக் கப்பட்டுள்ளன. ஆனால் பிரான்ஸில் அவற்றுக்கு அனுமதி இல்லை. கருணைக் கொலை மற்றும் மருத்துவ உதவியுடனான தற்கொலை போன்றவற்றை அனுமதிப்பதற்காக சட்டங்களில் திருத்தம் கொண்டுவருவதற்கு மக்ரோன் அரசு தீர்மானித்துள்ளது.

மிக நீண்ட காலமாக விவாதத்துக்குரிய விடயமாக இருந்துவருகின்ற இந்த விவகாரம் தொடர்பாக அடுத்த மாதம் குடிமக்கள் மாநாடு மூலம் மக்கள் கருத்து அறியப் படும் என்று அதிபர் மக்ரோன் அறிவித்திருக்கிறார்.

இந்தக் கட்டத்தில் தயாரிப்பாளர் ஜீன்-லூக் கோடார்டின் மரணம் வாழ்வை நிறைவு செய்யும் உரிமை தொடர்பான சட்டங்கள் மீது மீண்டும் நாட்டின் கவனத்தைத் திருப்பியிருக்கிறது. (அ)

# கென்யா 5ஆவது ஜனாதிபதியாக வில்லியம் ருடோ பதவியேற்றார்!

நைரேபி, செப். 15

கென்யாவின் ஐந்தாவது ஜனாதிபதியாக வில்லியம் ருடோ (William Ruto) நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை பதவியேற்றார்.

கடந்த மாதம் நடைபெற்ற தேர்தலில் 50.5 சதவீத வாக்குகளுடன்அவர் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டாலும், அந்த முடிவை எதிர்த்து நீதிமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் ரய்லா ஒடிங்கா மனு தாக்கல் செய்தார். எனினும், ரய்லாவின் மனுவை நீதிமன்றம் தள்ளுபடி செய்ததையடுத்து ஜனாதிபதியாக பதவியேற்றுள்ளார்.

கென்யாவில் துணை ஜனாதிபதியாக கடந்த ஒரு தசாப்த காலமாக இருந்த ருடோ, , கிழக்கு ஆபிரிக்க தேசத்தின் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் அதனை சமாளிக்க கடுமையாகப் போராடி வேண்டியிருக்கும். நாட்டில் தற்போது உணவு மற்றும் எரிபொருள் விலைகள் அதிகரித்து வருகின்றன, வேலையின்மை அதிகமாக உள்ளது மற்றும்



அரச கடன் அதிகரித்து வருகிறது.

இதேவேளை, பதவியேற்பு விழாவில் பேசிய ருடோ, ஒரு கிராமத்து சிறுவன் கென்யாவின் ஜனாதிபதியாகிவிட்டான் என்று கூறினார். இதன்போது கூட்டம் பெரும் ஆரவாரம் செய்து மகிழ்ச்சி வெளியிட்டது.

கிழக்கு ஆபிரிக்க நாடான கென்யாவில் ஏற்பட்டுள்ள கடும் வறட்சியால் உணவு நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலையில் 50 வீத மானியத்தின் 40 மில்லியன் மூடை உரங்கள் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படும் என ருடோ நேற்றைய பதவியேற்பு விழாவின் போது உறுதியளித்தார்.(அ)

# 44 பில்லியன் டொலருக்கு ருவிட்டரை எலான் மஸ்குக்கு விற்பதற்கு முடிவு

## வாக்கெடுப்பில் பங்குதாரர்கள் ஒப்புதல்

நியூயோர்க், செப். 15

டெஸ்லா நிறுவனர் எலான் மஸ்க்குக்கு ருவிட்டரை 44 பில்லியன் அமெரிக்க டொலருக்கு விற்பனை செய்ய பங்குதாரர்கள் ஒப்புதல் அளித்துள்ளனர்.




எலான் மஸ்க்குக்கு ருவிட்டர் நிறுவனத்தை விற்பது தொடர்பாக நேற்று செவ்வாய்க்கிழமை தன் பங்குதாரர்களிடையே ருவிட்டர் பொது வாக்கெடுப்பை நடத்திய நிலையில் அதற்கு ஆதரவாக பங்குதாரர்கள் வாக்களித்துள்ளனர்.

ருவிட்டரை வாங்கும் ஒப்பந்தத்திற்கு முன்னர் உடன்பட்ட எலான் மஸ்க் தற்போது அந்த ஒப்பந்தத்தை இரத்துச் செய்யப் போவதாக கருத்து வெளியிட்டு வரும் நிலையில் ஒப்பந்தத்தை மஸ்க் தன்னிச்சையாக ரத்து செய்ய முடியாது என்றும் ருவிட்டர் நிறுவன பங்குதாரர்கள் முடிவின்படி நடக்கப்போவதாக ருவிட்டர் நிர்வாகம் சர்ச்சைகளுக்கு பதில் தெரிவித்தது. இதனையடுத்து இந்த விவகாரம் நீதிமன்றத்துக்கும் சென்றுள்ளது.

முன்னதாக உலகப் பெரும் கோடீஸ்வரர்களின் ஒருவரும் டெஸ்லா அமைப்பின் தலைமை செயலதிகாரியுமான எலான் மஸ்கிற்கு ட்விட்டரை விற்க நிறுவனத்தின் இயக்குநர்கள் குழு ஒப்புதல் அளித்தது. அதன்படி ஒப்பந்தமானது. அதற்கு முன்னதாக ருவிட்டரில் 9 சதவீத பங்குகளை வாங்கியிருந்த எலான் மஸ்க் அந்நிறுவனத்தின் மிகப் பெரிய பங்குதாரராக இருந்தார்.

இந்நிலையில், திடீரென ருவிட்டர் நிறுவனத்தை வாங்க மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தை இரத்து செய்வதாக எலான் மஸ்க் கடந்த ஜூலை 10 ஆம் திகதி அறிவித்தார்.

முன்னதாக, ருவிட்டர் பணியாளர்களுடன் காணொலி மூலம் பேசிய எலான் மஸ்க், ருவிட்டர் சமூக வலைதளத்தில் போலிக் கணக்குகள் குறித்த முழு புள்ளிவிவரம், புதிய போலிக் கணக்குகள் உருவாவதைத் தடுக்கும் நடவடிக்கைகள் குறித்த விவரங்களை வெளியிட வேண்டும் எனவும் ட்விட்டரைக் கையகப் படுத்துவதற்குத் தடையாக பல பிரச்னைகள் இருப்பதாகக் குறிப்பிட்டிருந்தார்.

இந்த நிலையில் எலான் மஸ்க் ஒப்பந்தத்தில் இருந்து பின்வாங்கி உள்ளதால் அவர் மீது வழக்குப்பதிவு செய்யப்படும் என ருவிட்டர் நிறுவனம் தெரிவித்தது. மேலும், ஒப்பந்தத்தின் படி அவர் நிறுவனத்தை கண்டிப்பாக வாங்க வேண்டும் என்று ட்விட்டரின் வாரியத் தலைவர் பிரட் டெய்லர் தெரிவித்தார்.

இந்த நிலையில், எலான் மஸ்க்குக்கு ருவிட்டர் நிறுவனத்தை விற்பது தொடர்பாக தன் பங்கு தாரர்களிடையே பொது வாக்கெடுப்பை அந் நிறுவனம் நடத்தியதில் அதற்கு ஆதரவாக பங்கு தாரர்கள் ஒப்புதல் அளித்துள்ளனர்.

எனினும் நீதிமன்றத்தில் வழக்கு இருப்பதால் நீதிமன்றம் மூலமே இந்த விவகாரத்தில் தீர்வு எட்டப்படலாம் என்று கூறப்படுகிறது. (அ)



ஜாம்பவான்களின் இருபது - 20:

## சனத் ஜெயசூரிய அபாரம் இலங்கை அணி வெற்றி!

கான்பூர், செப். 15

சனத் ஜெயசூரியவின் அபார பந்துவீச்சால் இங்கிலாந்து ஜாம்பவான் அணியுடனான 5ஆவது லீக் போட்டியில் 7 விக்கெட்களால் இலங்கை ஜாம்பவான் அணி இலகுவான வெற்றியை ஈட்டியது.

வீதி பாதுகாப்பு குறித்து பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இருபது - 20 கிரிக்கெட் வடிவிலான வீதி பாதுகாப்பு உலகத் தொடர் (Road Safety World Series) இரண்டாவது தடவையாகவும் இந்தியாவில் நடத்தப்பட்டு வருகிறது. இலங்கை, இந்தியா, பங்களாதேஷ், அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, நியூஸிலாந்து, தென்னாபிரிக்கா, மேற்கிந்தியத் தீவுகளின் ஜாம்பவான் அணிகள் இப்போட்டித் தொடரில் பங்கேற்கின்றன.

இத்தொடரின் 5ஆவது லீக் போட்டியில் இலங்கை மற்றும் இங்கிலாந்து ஜாம்பவான் அணிகள் 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மோதிக்கொண்டன.

இலங்கை நேரப்படி இரவு 7.30 மணிக்கு ஆரம்பமான கான்பூரில் நடைபெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி இலங்கை பந்துவீச்சாளர்களின் துல்லியமான பந்துவீச்சு காரணமாக 19 ஓவர்கள் நிறைவில் 78 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

துடுப்பாட்டத்தில் இங்கிலாந்து சார்பாக அணித் தலைவர் இயன் பெல் 15 ஓட்டங்களை அதிகபட்சமாக பெற்றுக்கொண்டார். பந்துவீச்சில் சிறந்த ஆற்றலை வெளிப்படுத்திய சனத் ஜெயசூரிய 4 ஓவர்கள் வீசியதுடன், 2 ஓட்டமற்ற ஓவர்கள், 3 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்களை சாய்த்தார். இவரைத் தவிர நுவான் குலசேகர, சத்துரங்க டி சில்வா இருவரும் தலா 2 விக்கெட்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி சற்று மெதுவாக துடுப்பெடுத்தாடி 14.3 ஓவர்களில் 3 விக்கெட்களை இழந்து 79 ஓட்டங்களைப் பெற்று 7 விக்கெட்களால் வெற்றியீட்டினர். துடுப்பாட்டத்தில் தரங்க (23), டில்ஷான் முனவீர (24), திலகரட்ண டில்ஷான் (15) ஓரளவு ஓட்டங்களை பெற்று ஆட்டமிழந்தனர்.

சனத் ஜெயசூரியவின் துடுப்பெடுத்தாட வராததால், அவரின் துடுப்பாட்டத்தை ரசிக்க வந்த ரசிகர்களுக்கு ஏமாற்றமே மிஞ்சியது. எனினும், அவர் பந்துவீச்சில் சிறப்பாக செயல்பட்டு போட்டியின் ஆட்ட நாயகனாக தெரிவு செய்யப்பட்டமை அவரின் ரசிகர்களுக்கு விருந்தாக அமைந்தது.

முன்னதாக அவுஸ்திரேலியாவுடன் விளையாடிய முதல் போட்டியில் ஈட்டிய வெற்றியுடன், தற்போது 4 புள்ளிகளை பெற்றுள்ள இலங்கை ஜாம்பவான் அணி புள்ளிப்பட்டியலில் முதலிடத்தில் உள்ளது. இலங்கை ஜாம்பவான் அணி தனது மூன்றாவது போட்டியில் நாளை மறுதினம் தென்னாபிரிக்க ஜாம்பவான் அணியை சந்திக்கவுள்ளது. (ஐ)

## சமூகவலைத்தளங்களில் கோலி புதிய மைல்கல்!

புதுடில்லி, செப். 15




இந்திய அணியின் நட்சத்திர வீரர் விராட் கோலி கடந்த மூன்று ஆண்டுகளாக தகுதியின்றி தவித்து வந்த நிலையில், சமீபத்தில் நடைபெற்ற ஆசிய கோப்பையில் சதமடித்து அனைவரின் கவனத்தையும் ஈர்த்தார்.

கடந்த காலங்களில் தகுதியின்றி தவித்துவந்த விராட் கோலிமீது பல்வேறு விமர்சனங்கள் வைக்கப்பட்டது. எத்தனை விமர்சனங்கள் வந்தாலும் சமூக வலைதளங்களில் சுப்பர் ஸ்டாராக இருக்கிறார்.

இந்த நிலையில், தற்போது ருவிற்றரில் 5 கோடி பின்தொடர்பவர்களை எட்டிய முதல் கிரிக்கெட் வீரர் என்ற பெருமையை கோலி, பெற்றுள்ளார்.

33 வயதான அவர், இன்ஸ்ட்ராகிராமில் 21.1 கோடி பின்தொடர்பவர்களுடன் உலகின் மூன்றாவது பிரபலமான விளையாட்டு வீரர் என்ற பெருமைக்கும் சொந்தக்காரராக உள்ளார்.

இந்த வரிசையில் கிறிஸ்ரியானோ ரொனால்டோ (47.6 கோடி) மற்றும் லியோனல் மெஸ்ஸி (35.6 கோடி) ஆகியோர் முதல் மற்றும் இரண்டாவது இடத்தில் உள்ளனர்.

மேலும், கோலிக்கு 4.9 கோடிக்கும் அதிகமான பேஸ்புக் ரசிகர்கள் உள்ளனர். சமூக ஊடகங்களில் அவரைப் பின்தொடர்பவர்களின் மொத்த எண்ணிக்கை 31 கோடிக்கும் அதிகமாக உள்ளது.

இந்த ஆண்டு இறுதியில் அவுஸ்திரேலியாவில் நடைபெறவுள்ள இருபது - 20 உலகக் கிண்ணத்துக்கு முன்னதாக கோலி முதல் இருபது - 20 சதமடித்து மீண்டும் வழமைக்கு திரும்பியிருப்பது இந்திய அணிக்கு கூடுதல் பலமாக பார்க்கப்படுகிறது. (ஐ)



## ஹாலேப்புக்கு சத்திர சிகிச்சை

புசாராட்ஸ், செப். 15

பிரபல ரென்னிஸ் வீராங்கனையும், 2 கிராண்ட்ஸ்லம் பட்டம் வென்றவருமான சிமோனா ஹாலேப் (ருமேனியா) மூக்கின் உள்பகுதியில் ஏற்பட்ட சில பிரச்னைகளால் அவதிப்பட்டு வந்தார். குறிப்பாக இரவு நேரத்தில் மூச்சு விடுவதில் சிரமப்பட்டார்.

இதனால் அவருக்கு மூக்கில் சத்திர சிகிச்சை செய்யப்பட்டது. இது குறித்து அவர் தனது ருவிற்றர் பக்கத்தில், "எல்லாமே சரியாக நடந்தது. சில வாரங்கள் ஓய்வுக்கு பிறகு பயிற்சியை தொடங்குவேன். விரைவில் உங்களை ரென்னிஸ் களத்தில் சந்திக்கிறேன்" என்று குறிப்பிட்டு மருத்துவமனையில் இருக்கும் புகைப்படத்தையும் வெளியிட்டுள்ளார்.

தரவரிசையில் தற்போது 9ஆவது இடத்தில் உள்ள ஹாலெப் அமெரிக்க ஓப்பனில் முதல் சுற்றுடன் வெளியேறியிருந்தார். (ஐ)



## சென்னை ஓப்பன் ரென்னிஸ் அலிசன் அதிர்ச்சி தோல்வி!

சென்னை, செப். 15

சென்னை ஓப்பன் மகளிர் ரென்னிஸின் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் போட்டித் தரவரிசையில் முதலிடம் வகித்த அமெரிக்காவின் அலிசன் ரிஸ்கி அதிர்ச்சி தோல்வியடைந்தார்.

சென்னையில் நேற்று முன்தினம் நடந்த போட்டியில், போட்டித் தரவரிசையில் முதலிடமும், உலகத் தரவரிசையில் 23ஆவது இடத்தில் உள்ளவருமான அலிசன் ரிஸ்கி, 147ஆம் நிலை வீராங்கனையான ரஷ்யாவின் அனஸ்டசியா கசனோவாவை எதிர்த்து விளையாடினார். ஒரு மணி நேரம் 23 நிமிடங்கள் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் அலிசன் ரிஸ்கியை 6-2, 6-3 என்ற நேர் செற்றில் தோற்கடித்தார் அனஸ்டசியா கசனோவா.

அனஸ்டசியா தனது 2ஆவது சுற்றில் 174ஆம் நிலை வீராங்கனையான பிரிட்டனின் கேட்டி ஸ்வானுடன் மோதுகிறார். (ஐ)

## மும்பை அணியில் மஹேலவுக்கு புதிய உயர் பதவி அளிக்கப்பட்டது

மும்பை, செப். 15

மும்பை இந்தியன்ஸ் அணியின் தலைமைப் பயிற்றுவிப்பாளராக பணியாற்றிய இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் மஹேல ஜெயவர்த்தனவுக்கு புதிய பதவி அளிக்கப்பட்டுள்ளது.

மும்பை இந்தியன்ஸ் அணியின் உரிமையாளர்களால் மஹேல ஜெயவர்த்தனவுக்கு அணியின் "Global Head of Performance" என்ற பதவி வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி, மும்பை இந்தியன்ஸ் அணிக்கு சொந்தமான மூன்று அணிகளுக்கும் பயிற்சி நடவடிக்கைகள் மற்றும் புதிய வீரர்கள் தேர்வு தொடர்பான அனைத்துப் பொறுப்புகள் அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் மும்பை இந்தியன் அணியின் புதிய தலைமைப் பயிற்றுவிப்பாளராக சஹீர் கான் நியமிக்கப்பட்டுள்ளார்.



# அரச உத்தியோகத்தர்களின் வீட்டுத்தோட்ட செய்கையை ஊக்குவிக்க நடவடிக்கை



*திருமலை, செப். 15*

அரச உத்தியோகத்தர்களின் வீட்டுத்தோட்ட பயிர்ச் செய்கையை ஊக்குவிக்கும் நோக்கில் இயற்கை பசளை இலவசமாக வழங்கும் நிகழ்வு நேற்று முன் தினம் கிழக்கு மாகாண முதலமைச்சில் இடம் பெற்றது.

கிழக்கு மாகாண முதலமைச்சின் திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எஸ்.எம். பாயிஸ் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வுக்கு முதலமைச்சின் செயலாளர் திருமதி கலாமதி பத்மராஜா பிரதம அதிதியாக கலந்துகொண்டு முதலமைச்சில் கடமையாற்றும் உத்தியோ கத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்கு வழங்கினார்.

இந்நிகழ்வில் முதலமைச்சின் கணக்காளர் எம்.ஐ.எம். முஸ்தபா உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு இயற்கை பசளை வழங்கினர். (அ)

# கடன் பிரச்னை மேலும் அதிகரிக்காமல் தடுக்கும் பொறுப்பு சீனாவுக்கு உள்ளது

## சர்வதேச நாணய நிதியத் தலைவர் சுட்டிக்காட்டு

**ஜெனிவா, செப். 15**

**இலங்கை உள்ளிட்ட குறைந்த வருமானம் கொண்ட நாடுகள் எதிர்நோக்கும் கடன் பிரச்னைகள் மேலும் அதிகரிக்காமல் தடுக்கும் பொறுப்பு சீனாவிற்கும் ஏனைய பெரும் கடன் வழங்கும் நாடுகளுக்கும் உள்ளது என சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.**

வளர்ந்து வரும் சந்தையில் 25 விகிதமான நாடுகளும் குறைந்த வருமானம் கொண்ட நாடுகளில் 60 விகிதமான நாடுகள் கடன் நெருக்கடியில் இருப்பதாக சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கிறிஸ்டினா ஜோர்ஜீவா தெரித்துள்ளார்.

குறிப்பாக, இலங்கைக்கு பொதுக் கடனாளிகள் விரைவாக பேச்சுவார்த்தையை மேற்கொள்வார்கள் என்றும் தனியார் கடன் வழங்குநர்கள் பேச்சுவார்த்தைக்கு வருவார்கள் என தான் நம்புவதாகவும் கிறிஸ்டினா ஜோர்ஜீவா கூறினார்.

இலங்கையின் கடனை மறுசீரமைப்பது தொடர்பாக இந்தியா, சீனா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளுடன் லசார்ட் நிதி ஆலோசனைக் குழு பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளதாக இலங்கை அரசாங்கம் உறுதிப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மண்ணெண்ணெய் விலை குறைந்தால் வடக்கில் மீன் விலையை குறைக்கலாம்

## யாழ்.மாவட்ட கடற்தொழிலாளர் சங்கம் கூறுகிறது

*யாழ்ப்பாணம், செப். 15*

மண்ணெண்ணெய் விலையை குறைத்தால் வடக்கில் மீன் விலை குறைக்க முடியும் என யாழ்.மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத் தலைவர் அன்னராசா தெரிவித்தார்.

வடக்கு மாகாண ஐந்து மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் தொடர்பில் நேற்றுக் காலை யாழ்.மாவட்ட மீனவ சம்மேளத்தின் அலுவலகத்தில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இது தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மீனவர்கள் எதிர் நோக்கும் முக்கியமாக மூன்று பிரச்னைகளை நாங்கள் கலந்துரையாடினோம்.

தற்காலத்தில் கடற்தொழில் சமூகம் பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்கின்றது. அதேபோல இலங்கையிலே அதிகரிக்கப்பட்ட மண்ணெண்ணெய் விலையினால் கடற்தொழில் சமூகம் எப்படி பாதிக்கப்படுகின்றமை தொடர்பாகவும், மன்னார் மாவட்டத்தில் மக்களுக்கு இடையூறாக காணிகள் வழங்கப்படுவது அல்லது அபிவிருத்தி என்ற போர்வையில்-முதலீடு என்ற போர்வையில் கடற்தொழில் சமூகத்திற்கு பாதகமான செயற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றன. அதனை கட்டுப்படுத்துவது தொடர்பாகவும் கலந்துரையாடலில் நாங்கள் பேசி இருக்கின்றோம்.

வடக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் இரண்டு லட்சம் மீனவ மக்கள் தமது வாழ்வாதாரப் பிரச்னைகளால் வரையறுக்கப்பட்ட பிரதேசத்தை கைவிட்டுப்போகின்ற நிலையை நாங்கள் உணர்கின்றோம். அது ஒரு கவலைக்களிக்கின்ற விடயமாகும்.

அதேபோல் வடக்கு மாகாணத்தில் இருக்கின்ற மக்கள் கடற்தொழில் சமூகத்திற்கு மண்ணெண்ணெய் கிடைக்கின்றது, ஆனால் மீன் அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுகிறது எனக் கவலை வெளிப்படுத்தி இருக்கின்றார்கள்

கடந்த காலத்தில் 87 ரூபாய்க்கு எரிபொருள் விற்றபோது தொழில் இலகுவாக செய்து குறைந்த விலையில் மக்களுக்கு மீன் விற்கக் கூடியதாக இருந்தது. தற்போது விலை அதிகரிப்பின ஊடாக எங்களுக்கு 20 லீற்றர் மண்ணெண்ணெய் எடுத்து தொழில் செல்வதற்கு அண்ணளவாக ஒன்பதாயிரம் ரூபாய் தேவைப்படுகின்றது. ஆனால் பிடிக்கப்படுகின்ற மீன் ஏழாயிரம் ரூபாய்வரை விற்பனை செய்யப்படுகின்றது.

நமது முதலைக் கூட பெற முடியாத நிலை காணப்படுகின்றது. எங்கள் வாழ்வாதாரம் மிகவும் கவலைக்குரியதாக காணப்படுகின்றது.

இதனால் குறைந்த அளவு தொழிலாளர்கள் மாத்திரமே தொழிலுக்கு செல்கின்றார்கள். அதிகளவான மீனவர்கள் வேறு தொழில்களில் அதிக நாட்டம் காட்டுவதை அவதானிக்க முடிகின்றது.

எமக்கு எரிபொருள் குறைந்த விலையில் பெறுவதற்கு அனைவரின் ஒத்துழைப்பு மிக அவசியம். அந்த ஒத்துழைப்பு கிடைக்கப்பெற்றால் எதிர்காலத்தில் மீனின் விலை குறைத்து விற்பனை செய்ய முடியும்.

இரண்டு வருடத்திற்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் புயல் தாக்கத்தின்போது பாதிக்கப்பட்ட மீனவக் குடும்பங்களுக்கு இன்னமும் இழப்பீட்டு உதவிகள் சென்றடையவில்லை. அந்த இழப்பீடுகள் நமக்கு கிடைக்கவில்லை.

கடற்தொழில் சமூகத்திற்கு என்று எந்தவித இழப்பீடும் வழங்கப்படுவில்லை. இது வடக்கு மக்களுக்கு பெரும் கவலை அளிக்கின்றது-என்றார். (அ)






# வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு இடையிலான உறவு பாலமாக பரிணமித்துள்ள கூட்டுறவுத்துறை

*அம்பாறை, செப். 15*

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு இடையிலான உறவு பாலமாக கூட்டுறவுத்துறை தற்போது பரிணமித்து உள்ளது என்று அம்பாறை மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாச தலைவர் எஸ். லோகநாதன் தெரிவித்தார்.

பொருத்தமான சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தை காரைதீவு பிரதேசத்தில் புனரமைப்பதற்கான முன்னோடி கூட்டம் நேற்று புதன் கிழமை இடம்பெற்றது. இதில் சமாச தலைவர் எஸ். லோகநாதன் மற்றும் உப தலைவர் ரீ. ரூபாகரன் ஆகியோருடன் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆறுமுகம் நடராசசிங்கம் ஆகியோரும் பங்கேற்றனர். சமாச தலைவர் லோகநாதன் மேலும் தெரிவிக்கையில்-

புலம்பெயர்ந்து வாழ்கின்ற தமிழ் உறவுகள் வட மாகாணத்தில் ஏராளமான அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்து வருகின்ற நிலையில் தற்போது கிழக்கு மாகாணத்திலும் கூடுதலான வேலைத் திட்டங்களை மேற்கொள்ள தொடங்கி உள்ளனர். குறிப்பாக நெதர்லாந்து நாட்டின் மனித நேயக் கூட்டுறவுச் சங்கத்தின் பங்களிப்புடன் அம்பாறை மாவட்டத்தில் உள்ள தமிழ் கிராமங்களில் பல வேலைத் திட்டங்களும் முடுக்கி விடப்பட்டு உள்ளன.

நாவிதன்வெளி, பாண்டிருப்பு, மல்வத்தை, மல்லிகைத் தீவு போன்ற கிராமங்களை உதாரணத்துக்கு சொல்ல முடியும். விவசாயம், நெசவு, வீட்டு தோட்டம், மீன் பிடி போன்ற க சுய தொழில் முயற்சிகள் சார்ந்து ஊக்குவிப்புகளை மேற்கொள்கின்றனர். காரைதீவு பிரதேசத்தில் மீனவர்களுக்கான தொழில் வாய்ப்பு, வாழ்வாதாரம் ஆகியவற்றை மேம்படுத்துகின்ற வேலை திட்டங்களை விரைவில் ஆரம்பிக்க உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. சமாசத்தின் தலைவர் என்கிற வகையில் அவர்களுடைய நம்பிக்கையை நான் வென்று இவ்வேலை திட்டங்கள் சரியாகவும், முறையாகவும் முன்னெடுக்கப்படுவதை உறுதிப் படுத்துவனாக உள்ளேன்.

அரசியல்வாதிகள் வாக்குறுதிகளை வழங்குவார்கள். வாக்குகளை பெற்று சென்று விடுவார்கள். அவர்கள் தேர்தல்களில் வென்று சுக போகங்களை அனுபவிப்பார்கள். மீண்டும் இன்னொரு தேர்தலுக்கு வருவார்கள். பாவம் மக்கள். ஆனால் நாம் அவ்வாறானவர்கள் அல்லர்-என்றார். (அ)

## உள்நாட்டு...

இந்தத் தீர்மானத்தில், தமிழ் மக்கள் போர் முடிவுக்கு வந்த - 2009 ஆம் ஆண்டின் பின்னர் தொடர்ச்சியாக கோரி - வலியுறுத்தி வரும் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் பாரப்படுத்துவது தொடர்பில் எதுவும் கூறப்படவில்லை.

ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் 'கோர் குறூப்' நாடுகளான பிரித்தானியா, ஜேர்மனி, கனடா, மலாவி, வடக்கு மசிடோனியா, மொண்டினீக்ரோ நாடுகள் இந்த வரைவு தீர்மானத்தை சமர்ப்பித்தன.

இதில், நல்லிணக்கம், அனைத்து மக்களும் மனித உரிமைகளை முழுமையாக அனுபவிப்பதை உறுதிப்படுத்துதல், அதிகாரப் பகிர்வு தொடர்பான கடப்பாடுகளை இலங்கை நிறைவேற்றவும் மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்த வலியுறுத்தும் அதேநேரம், 13ஆவது திருத்தத்துக்கு அமைவாக வடக்கு, கிழக்கு மாகாண சபைகள் திறம்படசெயல்படுவதை உறுதி செய்யவும் வேண்டும் என்றும் இந்த நாடுகள் வலியுறுத்தியுள்ளன.

மேலும், இலங்கையில் நடைபெற்றவை எனக் கூறப்படும் போர் குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு விரோதமான செயல்கள் குறித்து எதிர்கால விசாரணைக்கு தேவையான ஆதாரங்களை சேகரிக்கவும் - பாதுகாக்கவும் ஐ. நா. மனித உரிமைகள் பேரவைக்கு உள்ள திறனை நீடிக்கவும் வலுப்படுத்தவும் தீர்மானம் வலியுறுத்துகிறது.

அத்துடன், தீவிர இராணுவ மயமாக்கல், நிர்வாகத்தில் பொறுப்புக்கூறல் இல்லாமை மற்றும் கடுமையான மனித உரிமைகள் மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்களுக்கு தண்டனை விலக்கு உட்பட இலங்கையின் நெருக்கடிக்கு பங்களித்த அடிப்படைக் காரணிகள் மற்றும் மூல காரணிகளை நிவர்த்தி செய்தல் வேண்டும். சிவில் அரசாங்க செயல்பாடுகளை தொடர்ந்து இராணுவ மயமாக்கல், நீதித்துறை மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் பொறுப்பான முக்கிய நிறுவனங்களின் சுதந்திரமற்ற போக்கு, தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் நீண்டகால குறைகள் மற்றும் கோரிக்கைகளை நிவர்த்தி செய்வதில் முன்னேற்றமின்மை, சிறுபான்மை இனத்தவர்கள் மீதான கண்காணிப்பு - அச்சுறுத்தல் மற்றும் ஊடகவியலாளர்கள், மனித உரிமைகள் செயல்பாட்டாளர்கள், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் மற்றும் இறந்தவர்களை நினைவுகூருவதற்கான தடை மற்றும் பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறைகளை துன்புறுத்துதல்கள் போன்றவை குறித்து வரைவு தீர்மானம் ஆழமான கவலைகளை வெளியிட்டுள்ளது.

தவிர, பயங்கரவாதத் தடுப்பு சட்டத்தை இரத்து செய்வதற்கும், பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடுவதற்கான புதிய சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கான இலங்கையின் கூற்றுக்களை இந்தத் தீர்மானம் கவனத்தில் கொள்கிறது. எனினும், பல ஆண்டுகளாக சர்வதேச சட்டத்துக்கு அமைவாக சட்டம் திருத்தப்படும் என்று இலங்கை சர்வதேச சமூகத்துக்கு பல உறுதிமொழிகளை அளித்துள்ளது. இன்றுவரை, போதுமான சீர்திருத்தங்கள் செய்யப்படவில்லை என்பதையும் தீர்மானம் சுட்டிக்காட்டுகிறது.

தனிநபர்களை தன்னிச்சையாக கைது செய்வதற்கும் தடுத்து வைப்பதற்கும், கைதிகள் சித்திரவதை - பாலியல் வன்புணர்வு மற்றும் பிற மோசமான சிகிச்சைக்கு உள்ளாக்குவதற்கும் ஒரு கருவியாக இலங்கை பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை பயன்படுத்துகிறது என்று தீர்மானம் கூறுகிறது.

சர்வதேச நாணய நிதியத்துடன் பணியாளர் மட்ட உடன்படிக்கையை இலங்கை எட்டியுள்ளது என்ற அறிவிப்பை தீர்மானம் வரவேற்றுள்ளது. அத்துடன், நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள தினசரி ஊதியம் பெறுபவர்கள், குழந்தைகள், முதியவர்கள் மற்றும் ஊனமுற்ற நபர்கள் உட்பட மிகவும் பின்தங்கிய தனிநபர்களின் உரிமைகளை மேம்படுத்தி பாதுகாக்க வேண்டும் என்று வரைவில் சொல்லப்பட்டுள்ளது.

அத்துடன், வரைவு தீர்மானத்தின் இறுதிப் பத்தி இலங்கையில் மனித உரிமைகள் குறித்த கண்காணிப்பு மற்றும் அறிக்கையிடலை தொடருமாறு ஐ. நா. மனித உரிமைகள் பேரவையை உறுப்பு நாடுகள் வலியுறுத்தியுள்ளன.

## நீதி...

போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன்,

வறுமை, தொடர்ச்சியாக பின்தொடரப்படுதல், துன்புறுத்தல்கள் மெதுவான மற்றும் பின்தங்கிய சட்ட அமைப்பைக் கொண்ட நாட்டில் தண்டனையின் பிடியிலிருந்து விலக்களித்தல் என்பது அதிகாரபூர்வமற்ற ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கையாக காணப்படுகின்றது. இவ்வாறான ஒரு நாட்டில் பாதிக்கப்பட்டவர்கள் வீதிகளில் தொடர்ச்சியான போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அதேவேளை, செய்யக்கூடிய விடயம் என்னவென்றால் அழுதுபுலம்புவது மாத்திரம்தான்.

ஐ. நா. குழு பாதிக்கப்பட்டவர்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தக்கூடிய உண்மை மற்றும் நீதியை வழங்கக்கூடிய சட்டபூர்வமான பொறிமுறையை முன்வைக்க வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

2010 ஜனவரி 24ஆம் திகதி தனது கணவர் காணாமல் போனமை முதல் அரசாங்கம் மற்றும் அதன் அமைப்புகளால் தான் எதிர்கொண்ட நெருக்கடிகள் குறித்து அவர் கூறினார். இவ்வாறான மோசமான சூழ்நிலையில் கணவர் காணாமல்ஆக்கப்பட்ட தனது கணவர் தொடர்பான வழக்கு முட்டுக்கட்டை நிலையில் உள்ளதால் நீதி வழங்கப்படுமா என்பதே பிரதான சவால் எனவும் தெரிவித்தார்.

2017 இல் பிரதமராக பதவி வகித்தவேளை தற்போதைய ஜனாதிபதி காணாமல்போன அனைவரும் உயிரிழந்துவிட்டனர் அல்லது வெளிநாட்டு சென்றுவிட்டனர் என தெரிவித்தார் அவர் நீதியை வழங்குவார் என எதிர்பார்க்க முடியாது எனவும் சந்தியா எக்னலிகொட தெரிவித்துள்ளார்.

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியான பின்னர் அரசியல் பழிவாங்கல் குறித்து ஆராய்வதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டது அந்த ஆணைக்குழு விசாரணையாளர்களையும் சாட்சிகளையும் குற்றஞ்சாட்டப்பட்டவர்களாக மாற்றியது. அந்த ஆணைக்குழு உயர்நீதிமன்ற உத்தரவை மீறியது, சாட்சியங்களிடமிருந்து வாக்குமூலங்களை பெற்றது இறுதியில் இந்த வழக்குடன் தொடர்புடைய இராணுவத்தினரை அனைத்து குற்றச்சாட்டுகளில் இருந்தும் விடுதலை செய்யுமாறு பரிந்துரைத்தது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் தாய்மார்களும் குடும்பத்தவர்களும் போராட்டத்தில் ஈடுபடும் அதேவேளை தங்கள் அன்புக்குரியவர்கள் குறித்த விடைகளை பெறுவதில் எதிர்கொள்ளும் நெருக்கடிகளை சுட்டிக்காட்டிய சந்தியா எக்னலிகொட 1990 முதல் நான்கு தசாப்தங்களாகிவிட்டன. பல ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. ஆனால் இன்றுவரை எந்த நீதியும் வழங்கப்படவில்லை - என்றும் கூறினார். (ஐ)

# 10 இலட்சம் இலங்கையர்கள் 20 மாதங்களில் வெளியேறினர்!

கொழும்பு, செப். 15

கடந்த 20 மாதங்களில் 10 இலட்சத்துக்கும் அதிகமான இலங்கையர்கள் வெளிநாடுகளுக்கு சென்றுள்ளனர் குடிவரவு - குடியகல்வு திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளரும் பிரதிக் கட்டுப்பாட்டாளருமான பியூமி பண்டார தெரிவித்தார்.

கடந்த வருடம் (2021) ஜனவரி முதலாம் திகதி முதல் இந்த வருடம் ஓகஸ்ட் மாதம் 30ஆம் திகதி வரையிலான 20 மாத காலப் பகுதியில் ஒரு இலட்சத்து 13 ஆயிரத்து 992 பேர் புதிதாக கடவுச்சீட்டுகளை பெற்றுள்ளனர் எனவும், அக்காலப்பகுதியில் 10 இலட்சத்து 50 ஆயிரத்து 24 பேர் வெளிநாடு சென்றுள்ளனர்.

மேலும், 44 இலட்சத்து 97 ஆயிரத்து 122 இலங்கையர்கள் கடவுச்சீட்டு வைத்திருப்பவர்கள் எனவும் அவர் குறிப்பிட்டார். (ஐ)

## முதல் நபராக...

வரிசை ஆரம்பமானது. இதில் 56 அகவைக்கொண்ட இலங்கை வம்சாவளி பெண்ணான வனேசா நந்தகுமாரனுக்கு அஞ்சலி செலுத்தும் வரிசையில் முதல் இடம் கிடைத்துள்ளது.

இந்தநிலையில் தமது குடும்பம் பிரித்தானிய அரச குடும்பத்தினர் பெரும் அபிமானிகள் என்று வனேசா நந்தகுமாரன் குறிப்பிட்டுள்ளார்.

இது அவர்கள் இலங்கைக்கு வழங்கிய சுதந்திரத்துக்காக திருப்பிச் செலுத்தும் நன்றி. பொதுநலவாயத்துக்காக அவர்கள் செய்தவற்றைப் பாராட்ட வேண்டும் - என்றும் அவர் கூறியுள்ளார். (ஐ)

## இந்தியா...

தார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் 51ஆவது அமர்வில் இலங்கை தொடர்பில் தீர்க்கமான முடிவை எடுக்க வேண்டும்.

ஐ. நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானங்களை நிறைவேற்றாது இலங்கை அரசாங்கம் அலட்சியம் செய்தே வருகின்றது. இலங்கையின் இந்த பித்தலாட்ட செயலை சர்வதேச சமூகம் புரிந்து கொண்டு இறுக்கமான தீர்மானத்தை எடுக்கவேண்டும்.

இதேவேளை ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் சீனா, ரஷ்யா, பாகிஸ்தான் போன்ற நாடுகள் இலங்கைக்கு ஆதரவாக குரல் கொடுத்துள்ளார்கள். ஆனால், இந்தியா இனப்பிரச்னைக்கான தீர்வு பற்றி குறிப்பிட்டுள்ளது.

இந்தப் பிரச்னைக்கு தீர்வாக 13 ஆம் திருத்த சட்டம் ஊடாக என்று கூறப்பட்டுள்ளது. அவ்வாறு என்றால் இலங்கையின் இனப் பிரச்னைக்கு தீர்வாக 13ஆம் திருத்தத்தை தீர்வாக கருதுகிறதா என்று கேட்க விரும்புகிறோம்.

நிச்சயமாக இதனை ஈழத் தமிழினம் ஒருபோதும் தீர்வாக ஏற்றுக்கொள்ளமாட்டாது. எத்தகைய வற்புறுத்தல் என்றாலும் இதனை ஏற்றுக்கொள்ள முடியாது.

13ஆவது திருத்தச் சட்டம் அரசமைப்பில் உள்ளது. அதனை அரசாங்கம் நடைமுறைப்படுத்தாது மலினப்படுத்தியுள்ளது. இதனை இந்தியா புரிந்து கொள்ள வேண்டும். ஐ. நா. மனித உரிமைகள் பேரவையில் இந்தியா பொறுப்புக்கூறல் தொடர்பில் எதையும் கூறவில்லை. பொறுப்பு கூறல் விடயத்தில் இந்தியா எங்களுக்காக குரல் கொடுக்க வேண்டும் என்பதே எங்களுடைய எதிர்பார்ப்பாகும்- என்றார். (ஐ)

## ராணி எலிசபெத்துக்கு பாராளுமன்றில் இரங்கல்!

கொழும்பு, செப். 15

பிரிட்டன் மகாராணி இரண்டாம் எலிசபெத்தின் மறைவுக்கு எதிர்வரும் 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பாராளுமன்றத்தில் இரங்கல் தெரிவிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சபாநாயகர் தலைமையில் நேற்று நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

## இந்தியா, ஆஸி,...

போது விவாதித்ததாக அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

இலங்கை மக்களுக்கான எங்கள் அர்ப்பணிப்பைப் பகிர்ந்து கொள்ளும் பிராந்திய பங்காளிகளின் தொடர்பு மற்றும் ஒத்துழைப்புக்கு நன்றி கூறுகிறேன் எனவும் அவர் கூறினார். (ஐ)

## அதிகாரப்...

மையில் இருக்கிறது. அதிலிருந்து மீள்வதற்கு உதவி செய்ய புலம்பெயர்ந்த அமைப்புகள் தயாராக உள்ளன. ஆனால், அதற்கு இலங்கையில் 70 ஆண்டுகளுக்கு மேலாக நீடிக்கின்ற இனப்பிரச்னைக்கு தீர்வு காணப்பட வேண்டும்.

சரியான அதிகார பகிர்வின் அடிப்படையிலான தீர்வு எட்டப்படாமல், வடக்கு - கிழக்கில் மாத்திரமன்றி, இலங்கையில் எந்த பகுதியிலும் புலம்பெயர்ந்த அமைப்புகள் முதலீடுகளை மேற்கொள்ளப் போவதில்லை.

இதேநேரம் இலங்கையில் இடம்பெற்றவை என்று கூறப்படும் போர் குற்றங்கள் தொடர்பான விசாரணைகளுக்கும் உலகத் தமிழர் பேரவை அழுத்தம் கொடுக்கும் - என்று கூறினார். (ஐ)

## 'தேசிய பேரவை'...

பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் 35 இற்கும் மேற்படாதோர் தேசிய சபையின் உறுப்பினர்களாக அங்கம் வகிப்பர். இதற்கமைய குறுகிய, நடுத்தர மற்றும் நீண்டகால தேசிய கொள்கைகளை வகுப்பதற்கான வழிகாட்டுதல்கள் தொடர்பான பாராளுமன்றத்தின் பொதுவான முன்னுரிமைகளை தீர்மானிப்பதற்கும், பொருளாதார உறுதிப்பாடு தொடர்பான குறுகிய மற்றும் நடுத்தர கால பொதுவான நிகழ்ச்சி திட்டங்கள் தொடர்பான உடன்பாட்டை எட்டுதல், அமைச்சரவை அமைச்சர்கள், தேசிய சபை, விசேட குழுக்களின் தவிசாளர்கள் மற்றும் இளைஞர் அமைப்புக்களின் அவதானிப்பாளர்கள் ஆகியோர் விசேட கூட்டங்களுக்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கும் தேசிய பேரவையில் முன்மொழிவுகள் செய்யப்படவுள்ளன.

தேசிய பேரவை துறைசார் மேற்பார்வைக் குழுக்கள், அரசாங்க நிதி பற்றிய குழு, அரசாங்க கணக்குகள் பற்றிய குழு, அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு, வங்கித் தொழில் மற்றும் நிதிச் சேவைகள் பற்றிய குழு, வழிவகைகள் பற்றிய குழு, பொருளாதார உறுதிப்படுத்தல் குழு அத்துடன் அரசாங்கக் கணக்குகளைக் கட்டுப்படுத்தும் ஏதேனும் குழு ஆகியவற்றிலிருந்து அறிக்கை கோருவதற்கான அதிகாரத்தை கொண்டிருக்கும். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் பாரிய சீர்திருத்தங்கள் அவசியம்

## ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்து

ஜெனிவா, செப். 15

**இலங்கையின் பொருளாதார மீட்சி மற்றும் நல்லிணக்கம் மற்றும் சட்ட சீர்திருத்தத்தை முன்னெடுத்துச் செல்வதற்கும், ஜனநாயக விழுமியங்களுக்கு முழுமையாக மதிப்பளித்து இலங்கைக்கு ஆதரவளிக்க தயார் என ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.**

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளரின் வாய்மொழிப் புதுப்பித்தல் தொடர்பான பொது விவாதத்தின்போதே நேற்று முன்தினம் ஜெனிவாவில் உள்ள ஐ.நா மற்றும் பிற சர்வதேச அமைப்புகளுக்கான ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள் இவ்வாறு தெரிவித்தனர்.

2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் திருத்தத்தை, சட்டத்தில் உள்ள நீண்டகால குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கான முதல் படியாக நாங்கள் பார்க்கிறோம் என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.

எவ்வாறாயினும் அதன் பின்னர் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிரான தேவையற்ற வன்முறை மற்றும் சமீபத்திய கைதுகளில் பயங்கரவாத தடைச் சட்டத்தைப் பயன்படுத்தியமை குறித்து ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள் குழு கவலை வெளியிட்டுள்ளது.

ஆகவே கருத்துச் சுதந்திரத்திற்கான உரிமையை நிலைநாட்ட வேண்டியதன் அவசியத்தை ஐரோப்பிய ஒன்றியம் இலங்கையிடம் சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும், சீர்திருத்த முயற்சிகளை வலுப்படுத்தவும் முக்கிய பிரச்னைகளில் உறுதியான முடிவுகளை முன்வைக்கவும், குறிப்பாக சர்வதேச தரங்களுக்கு அமைவாக முழுமையாக பயங்கரவாத தடைச் சட்டத்தை மாற்றியமைக்க வேண்டும் என்றும் அது கேட்டுள்ளது.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை விடுவிக்கவேண்டும் என்றும் சிவில் சமூகம் சுதந்திரமாக செயற்படுவதற்கும் சிறுபான்மையினருக்கு எதிரான பாகுபாடுகள் ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது. (அ)

# வன்முறையாளர்களை அடக்க பயங்கரவாத சட்டம் வேண்டும்

## கூறுகிறார் பிரசன்ன ரணதுங்க



கொழும்பு, செப். 15

"பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முற்றாக நீக்கிவிட்டு நாட்டைத் துண்டாட நினைக்கும் பயங்கரவாதிகளுக்குத் தீனி போட முடியாது. சிறைச்சாலைகளிலுள்ள பயங்கரவாதிகளை விடுவிக்கவும் முடியாது. எனவே, பயங்கரவாதிகளையும் வன்முறையாளர்களையும் அடக்கப் பயங்கரவாதத் தடைச் சட்டம் நடைமுறையில் இருக்கவேண்டும்."

- இவ்வாறு அமைச்சரும் ஆளும் கட்சியின் பிரதம கொறடாவுமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிராக வடக்கிலிருந்து ஆரம்பமாகியுள்ள கையெழுத்துப் போராட்டத்துக்கு எமது கடுமையான கண்டனங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஜெனிவா மாநாடு ஆரம்பமாகியுள்ள நிலையில் நாடு முழுவதிலும் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படும் என்று போராட்ட ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ள கருத்து பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கைக்கு எதிரான ஜெனிவா நிகழ்ச்சி நிரலின் பிரகாரம்தான் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

இது தொடர்பில் அரசு மிகவும் அவதானத்துடன் செயற்படும்-என்றார். (அ)

# பயங்கரவாத சட்டத்தை ரத்து செய்யக்கோரி மன்னாரில் நேற்று ஊர்தி வழிப் போராட்டம்!

மன்னார், செப். 15

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை ரத்து செய்யக் கோரி நாடளாவிய ரீதியில் ஊர்தி வழிப் போராட்டமாக சென்று கையெழுத்து திரட்டும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வரும் நிலை யில் 5ஆவது நாள் போராட்டம் நேற்று புதன் கிழமை மன்னாரில் இடம் பெற்றது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வாலிபர் முன்னணியும், சர்வ ஜன நீதி அமைப்பும் முன்னெடுத்த கையெழுத்து திரட்டும் பிரசார நடவடிக்கை மன்னார் மாவட்டத்தில் இலங்கை தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணியின் செயலாளர் சட்டத்தரணி எஸ்.டினேசன் தலைமையில் மன்னார் நகர பஸ் தரிப்பிடத்தில் இடம் பெற்றது.



இதன் போது மக்கள்,அரசியல் பிரதிநிதிகள் கலந்து கொண்டு பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை ரத்து செய்யக் கோரி கையொப்பமிட்டு தமது ஆதரவை வழங்கினர். (அ)

# பயங்கரவாதத் தடைச் சட்டம் இரத்துச் செய்வதற்கு ஆதரவு

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு



கொழும்பு, செப். 15

"பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் உடனடியாக இரத்துச் செய்யப்பட வேண்டும். அதன் கீழ் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ள காலி முகத் திடல் போராட்டச் செயற்பாட்டாளர்கள் மற்றும் தமிழ் அரசியல் கைதிகள் அனைவரும் விடுவிக்கப் படவேண்டும்."

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை இரத்துச் செய்யக் கோரி யாழ்ப்பாணத்திலிருந்து அம்பாந்தோட்டை வரை ஆரம்பமாகியுள்ள கையெழுத்துப் போராட்டத்துக்குப் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி முழுமையான ஆதரவைத் தெரிவித்துக்கொள்கின்றது.

இந்தப் போராட்டத்தில் எமது கட்சியினர் நேரடியாகப் பங்கேற்பார்கள்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்குவோம் என்று அரசு பாராராளுமன்றத்தில் வாக்குறுதிகூட வழங்கியுள்ளது. எனினும், அதை மீறி அரசு செயற்படுகின்றது. இது நாட்டுக்கு நல்லதல்ல-என்றார்.(அ)

# இனவாத அதிகாரிகளினாலேயே மோசமான பொருளாதார சிக்கல்

## காணி மீட்பு குழு செயற்பாட்டாளர் கால்தீன்

அம்பாறை, செப். 15

மதவாதமும், இனவாதமும் இந்த நாட்டின் பொருளாதாரத்தை அதாளபாதாளத்துள் தள்ளியுள்ளது என்பதுதான் உண்மை. இந்த நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாகவிருக்கும் விவசாயத்தை செய்கை பண்ண முடியாத ஒரு சூழ்நிலையை இனவாதக் கொள்கையுடைய சம்மந்தப்பட்ட அதிகாரிகள் தடுப்பது வேடிக்கையாகவிருக்கிறது என வட்டமடு காணி மீட்பு குழுவின் செயற்பாட்டாளர் பன்நூல் ஆசிரியர் கவிஞர் கால்தீன் தெரிவித்தார்.

அவரது அறிக்கையில் மேலும் தெரிவித்ததாவது:

உலகத்தில் விவசாயம் செய்கை பண்ணுவதை ஊக்கிவிக்கும் இவ்வேளையில், இலங்கை போன்ற வளமிக்க ஒரு நாட்டில் இனவாதச் சிந்தனையோடு ஏழை விவசாயிகளின் காணிகளை சுவிகரித்து அதைத் தடுப்பது வேடிக்கையாகவிருக்கிறது. இந்த நாட்டின் அபிவிருத்திக்காகவும் எழுச்சிக்காகவும் முஸ்லிம்களின் பங்களிப்பு எப்பொழுதும் இருந்து கொண்டிருக்கிறது.

1970 ஆம் ஆண்டிலிருந்து செய்கை பண்ணப்பட்டு வந்த வட்டமடு விவசாயக் காணிகள் விவசாயம் செய்யாமல் அதிகாரிகளால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. நிலவளமும், நீர்ப்பாசனமும் நிறைந்த காடற்ற இக்காணிகளை மக்களிடம் செய்கை பண்ணக் கொடுப்பதற்காக சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பேசி தீர்வு கிடைக்கவில்லை. இந்த அதிகாரிகளுக்கும், அமைச்சர்களுக்கும் தூர நோக்கு சிந்தனை இல்லாத காரணத்தால்தான் இன்று நாடு மிக மோசமான பஞ்சத்தை எதிர் நோக்கி நிற்கிறது.

அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபரைச் சந்தித்தும் தீர்வு கிடைக்காத நிலையில், இது தொடர்பாக ஜனாதிபதியின் மேலான கவனத்திற்கு கொண்டு வந்திருக்கிறோம். இனவாதத்தைக் களைந்து ஒரு தாய் பிள்ளைகளாய் இந்த நாட்டைக் கட்டியெழுப்ப அனைவரும் முன் வர வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்-என்றுள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 15.09.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**

6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.05 மணி : உளவியல் கருத்து வழங்குபவர் உளவள துனையாளர் -யாழ் பாவாணன்
7.10 மணி: இயற்கைவழி-எஸ்.உதயசீலன்-சமுர்த்தி உத்தியோகஸ்தர்



7.15 மணி : கதைவழி அறமொழி
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பாரதீ - மறுஒளிபரப்பு

**பகல்**

12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
1.00 மணி : நலம்தானா-மறுஒளிபரப்பு
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்- சிங்கம் சூது கௌவும் திரைப்படங்களிலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களுக்கான நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : வெள்ளித்திரை

**இரவு**

7.00 மணி : சமையல் சமையல்
7.30 மணி : வெள்ளிடை நுட்பம்-தொழில்நுட்பம் பயன்பாடுபற்றிய நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : கச்சேரி ஆரம்பம்-இசை நிகழ்ச்சி



10.00 மணி : நேருக்கு நேர்-அரசியல் நிகழ்ச்சி

## DAN COMEDY HD

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## ஐ ரிவி

**காலை**

5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழகக்கோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

## CHANNEL HOLY MARY

**காலை**

7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**

12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

## Pirai Television

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு